# கீதாஞ்சலி



யாழ்ப்பாணம் கந்தர்மடம், நீராவியடி பாரத்வாஜ கோத்ரம்

அமரர்கள்

## சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்
## சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள்

ஆகியோரின் நினைவு மலர்

23.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கந்தர்மடம், நீராவியடி பாரத்வாஜ கோத்ரம்

# அமரர்கள்

## சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்

தோற்றம் 28.10.1954 — மறைவு 23.04.2016

## சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள்

தோற்றம் 27.12.1990 — மறைவு 23.04.2016

### திதிவெண்பா

கந்தர்மடம் சேர்பால சுப்பிரமணி யக்குருவும்
மைந்தர்சாந் தஸ்வரூப நற்குருவும் - பந்தம் அற
துர்முகிநல் லாண்டினிலே சித்திரைத்தேய் துவிதியையில்
கற்பகன்தாள் சேர்ந்தனரே காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கீதாஞ்ஜலி

ஆலயங்களில் இறைவனுக்கான கீதோபசாரத்திற்குதவும்
சிறந்த இசைப்பாடல்கள் சிலவும்
நவசந்திப் பண்களும்

யாழ்ப்பாணம்
கந்தர்மடம், நீராவியடி
பாரத்வாஜ கோத்ரம்
அமரர்கள்

**சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்**
**சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள்**

ஆகியோரின்

# நினைவு மலர்

துர்முகி வருஷம்
சித்திரை அபரபட்ச துவிதியை
*23-04-2016*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குலவிளக்கு

பாசத்தால் உயர்ந்து நின்று

அன்போடு எமை வளர்த்து

நல்ல நிலைக்கு உயர்த்திய

எமது அன்புத் தெய்வம்

அமரர்

**சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்**

மற்றும்

எம் எல்லோரதும் பாச விளக்கு,

எமது அன்புச் செல்வம்

**சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள்**

இருவரினதும் நினைவாக

இம்மலரினைச்

சமர்ப்பணம் செய்கின்றோம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம், நீராவியடி, பாரத்வாஜ கோத்ரம்

அமரர்

சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

கண்டி, கட்டுக்கலை ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தைப் பரம்பரை உரிமையாகக் கொண்டவரும் பிரபல ஜோதிடராக விளங்கியவருமாகிய பாலசுப்பிரமணியக் குருக்களுக்கும் மீனாம்பாளுக்கும் மூத்த புதல்வன் சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் ஆவார். இவர், 1952ஆம் ஆண்டு ஆனி மாதம் முதலாம் திகதி காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பரம்பரைக் குரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வர ஐயர் கௌரி அம்மாவின் இரண்டாவது புதல்வி அமிர்தாம்பிகையை திருமணம் புரிந்தார். இவர்கள் இல்லற வாழ்க்கையின் மகிழ்ச்சியில் நல்லறம் பூண்டு கண்டியில் வாழ்ந்து வந்தனர்.

இவர்களின் நற்பேறாக 28.10.1954இல் மூத்த புதல்வனாக பாலசுப்பிரமணியக் குருக்கள் பிறந்தார். இவரின் சகோதரர்களாக சிவஸ்ரீ நல்லூர்தாசக் குருக்கள், சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள், திருமதி மீனாம்பாள், (அமரர்) திருமதி நாகேஸ்வரி, சிவஸ்ரீ பாலேந்திரக் குருக்கள் ஆகியோர் பிறந்தனர். கண்டியில் குதூகலமாக இவர்கள் மழலை வாழ்க்கை வாழ்ந்தனர். ஆரம்பக்கல்வியைக் கண்டியில் கற்று எட்டாவது வயதில் தமது தந்தை அமரத்துவம் அடைந்ததனால் தமது தாயின் தகப்பனிடம் சென்று காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

1964ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் கோண்டாவில் நாராயண சாஸ்திரிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநயனம் செய்துவைக்கப்பட்டார். தொடர்ந்து தமது சிறு வயதில் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம், காரைநகர் கிட்டங்கி துறைமுகம் ஆலயம், பரம்பரை ஆலயமாகிய காரைநகர், மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் பூஜைப் பணிகளையும் தொடர்ந்தார்.

1968ஆம் ஆண்டு கல்வியங்காட்டு சிவஞான விநாயகர் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆகியவற்றில் பணி செய்தார். தமது குடும்ப சூழ்நிலை கருதி 1969ஆம் ஆண்டு அனலைதீவு தெற்கு முருகன் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாடுகளும் விவசாயமும் செய்து குடும்பத்தைப் பாதுகாத்து வந்தார்.

1974ஆம் ஆண்டு மீண்டும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பணிசெய்தார். 1978ஆம் ஆண்டு சங்கானை நாகேஸ்வர ஐயர் - சுலோசனா அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வி கௌரீஸ்வரியை பங்குனி உத்தர நாளில் தமது வாழ்க்கைத் துணைவியாகக் கரம்பிடித்தார்.

இல்லறத்தின் நற்பயனாக ஸ்கந்தரூபக் குருக்கள், சாந்தஸ்வரூபி, ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், அஜந்த ரூபி, ஜெயந்தரூபி, சாந்தஸ்வரூபக் குருக்கள், பாலகணேச சர்மா, பாலமயூரி ஆகிய எட்டுச் செல்வங்களை பெற்றெடுத்தார். 1982ஆம் ஆண்டு சிவாசார்ய அபிஷேகம் பெற்றார். 1984இல் யாழ். வண்ணை வடகிழக்கு கொண்டலடி ஆலயத்தில் முதன்முறையாகக் கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார். அதனைத் தொடர்ந்து பல ஆலயங்களில் பிரதம குருவாக இருந்து ஏககுண்டம் முதல் முப்பத்து மூன்று குண்டம்வரை பலவிதமான கும்பாபிஷேகங்களையும், கலசாபிஷேகங்களையும், சங்காபிஷேகங்களையும், மஹோற்சவங்களையும் நடத்திவைத்தும் கலந்துகொண்டும் சிறப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001ஆம் ஆண்டில் தனக்கென ஒரு சொந்த இல்லத்தை கந்தர்மடத்தில் புகையிரத வீதியருகில் அமைத்து வாழ்ந்து, தமது பிள்ளைகள் அனைவருக்கும் பாடசாலை மற்றும் சம்ஸ்கிருதக் கல்வியையும் கற்பித்து உபநயனம், ஆசார்ய அபிஷேகம், பூப்புனித நீராட்டு, திருமணம் முதலிய அனைத்து விசேடங்களையும் அவ்வப்போது சிறப்பாக நடத்திவைத்தார்.

பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்து அவர்களின் விழக்களையும் உரிய காலங்களில் செய்துவைத்தார். தமது அறுபதாவது வயதில் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை அனைவரது அன்பினையும் ஆதரவையும் பெற்று 25. 10. 2014இல் பெரியோர்களின் ஆசியுடன் செட்டியந்தாழ்வு ஞாவைரவர் ஆலயத்தில் சீரும் சிறப்புடனும் நடத்தி மகிழ்ந்தார்.

யாழ். கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும், கந்தர்மடம் ஐயப்ப மணிகண்ட சபையின் போஷகராகவும் பொறுப்பேற்று தமது கடமைகளை இனிதே நடத்திவந்தார். பலவருடங்களாக சபரிமலை யாத்திரையையும் காசி, இராமேஸ்வரம் யாத்திரையையும் செய்து முடித்தார். அத்துடன் இந்துமத குருமார் ஒன்றியத்தில் பொருளாளராக இருந்து வேத ஆகமங்களைப் பயில்வதற்காக காஞ்சி காமகோடி பீட பாடசாலைக்கு 16 மாணவர்களைக் கூட்டிச்சென்று இணைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர் ஜோதிடவல்லுநராகவும் விளங்கினார். தம்மைத் தேடி வருபவர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வந்தார்.

இவ்வாறு மேன்மையுடனும், புகழுடனும் பெருடனும் வாழ்ந்துவந்தவர், விதியின் சதியால் 22.04.2016 வெள்ளிக்கிழமை எதிர்பாராமல் ஏற்பட்ட தீக்காயத்தால் 23.04.2016 சனிக்கிழமை துர்முகி வருடம் சித்திரை மாதம் தேய்பிறைத் துதியைத் திதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்மநட்சத்திரமான விசாகநட்சத்திரத்தில் மாலை 3.30 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம், நீராவியடி, பாரத்வாஜ கோத்ரம்

# அமரர்

# சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள்

## அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரர் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரி தம்பதிகளின் ஆறாவது புதவன் சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள் 1990. 12. 27இல் இப்பூவுலகில் உதித்தார். இவர் சகோதரர்களுடனும், அத்தான்மார்களுடனும், அண்ணிமார்களுடனும், பெறாமக்கள், மருமக்களுடனும் இனிதே வாழ்ந்துவந்தார். தமது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரியிலும், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கற்றார்.

2001ஆம் ஆண்டு உபநயனம் பெற்றார். குருகுலக்கல்வியையும் பெற்றார். தமது ஆலயப்பணிகளையும் தமது தந்தையுடனும், சகோதரர்களுடனும் உதவியாக இருந்து செய்துவந்தார். திருமணப்பருவம் எட்டியதும் சண்டிலிப்பாய் சிவஸ்ரீ ரஞ்சிதானந்தக் குருக்கள் - கல்யாணி தம்பதிகளின் புத்திரியான தபஸ்வினியை 11. 06. 2015இல் கரம்பிடித்து இல்லறவாழ்வில் ஈடுபட்டார். 15.11.2015இல் ஆசார்ய அபிஷேகம் செட்டியந்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்று தமது குருத்துவப் பணியை வேம்படி சித்திவிநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்து தொடர்ந்து பல குருத்துவ சேவைகளைச் செய்துவந்தார்.

அத்துடன் மூன்று வருடங்களாக சபரிமலை யாத்திரையை மேற்கொண்டார். இவ்வாறு அனைவருடனும் இன்முகத்துடனும் அன்பாகவும் பழகி அனைவரது நன்மதிப்பையும் பெற்று வாழ்ந்து வந்தவர் 22.04.2016 வெள்ளிக்கிழமை எதிர்பாராமல் ஏற்பட்ட தீக்காயத்தால் 23.04.2016 சனிக்கிழமை துர்முகி வருடம் சித்திரை மாதம் தேய்பிறைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதியைத் திதியில் மாலை 3.50 இற்கு சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அமரர், சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்களின் துணைவியின் துயர்

*கைப்பிடித்த நாள்முதல் கண்ணை இமை காப்பதுபோல என்னைக் காத்து வந்தீர். என் தேவைகள் அனைத்தையும் சமயமறிந்து பூர்த்தி செய்தீர். என் உடலிலே, மனத்திலோ சோகம், சோர்வு ஏற்படும் காலத்தில் அன்பும் பாசமும் காட்டி அரவணைத்துக் காத்திருந்தீர். எவ்வளவு கோபமிருந்தாலும் வெளிக்காட்டாமல் ஈருடலும் ஓருயிரும் போல் வாழவேண்டுமெனத் திருமண நாளன்றே உறுதிகூறினீர். பத்து மாதத்திற்குள் அவ்வுறுதிமொழி காற்றாய்ப் பறந்ததோ?*

*ஏன் இந்தச் சோதனையும் வேதனையும் எனக்களித்தீர்? நீங்கள் இல்லாத இப் பூவுலகில் நான் வாழ்வதெப்படி? சற்றும் சிந்திக்கவில்லையே ....... ஏன்? ஏன்? ஏன்?*

***மனைவி***

***சாந்தஸ்வரூபக் குருக்கள் தபஸ்வினி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் மகாகும்பாபிஷேகம், மஹோற்சவம் மற்றும் குருத்துவப்பணி நிகழ்த்திய ஆலயங்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோவில்

- எட்டு வயது முதல் 61 வயது வரை

யாழ். வண். வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம்
சாவகச்சேரி பெருங்குளம் சித்திவிநாயகர் ஆலயம்
சாவகச்சேரி மணங்குணப் பிள்ளையார் கோவில்.
காரைநகர் மருதடி விநாயகர் ஆலயம்
வண்ணை விஸ்வலிங்க விநாயகர் ஆலயம்
கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயம்
வேலணை இலந்தைக்காடு விநாயகர் ஆலயம்
அனலைதீவு விநாயகர் ஆலயம்
நயினை செம்படத்தம் விநாயகர் ஆலயம்
கந்தர்மடம் வேம்படி சித்திவிநாயகர் ஆலயம்
நுணாவில்குளம் கண்ணகை அம்மன் கோவில்
ஆவரங்கால் சாந்ததோட்டம் ஞானவைரவர் ஆலயம்
அச்சுவேலி கோரம்பலம் ஞானவைரவர் கோவில்
புத்தூர் மேற்கு வாராகி அம்மன் கோவில்
புத்தூர் ஆலடி முருகன் கோவில்
மிருசுவில் மன்னன்குறிச்சி முருகன் கோவில்
யாழ். சத்திரம் ஞானவைரவர் கோவில்
கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஞான வைரவர் கோவில்
பருத்தித்துறை சமரபாகு அம்மன் கோவில்
அச்சுவேலி கதிரிப்பாய் கண்ணகை அம்மன் கோவில்
யாழ். பஸ்நிலைய ஞானவைரவர் கோவில்
பருத்தித்துறை சமரபாகு வீரபத்திரர் கோவில்
மணல்பதி முத்துமாரி அம்மன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பாட்டி முத்துமாரி அம்மன் கோவில்
கோண்டாவில் மகாகணபதிப்பிள்ளையார் காளி கோவில்
கோண்டாவில் விஷ்ணு கோவில்
அராலி ஐயனார் கோவில்
ஆரியகுளம் அம்மன் கோவில்
புத்தூர் மணற்பகுதி புவனேஸ்வரி அம்மன் ஆலயம்
அரியாலை செம்மணிப் பிள்ளையார் கோவில்
கந்தர்மடம் ஆத்திசூடி விநாயகர் கோவில்
கலட்டிச்சந்தி தொழில்நுட்ப ஞானவைரவர் கோவில்
காரைநகர் சிவகாமி அம்மன் ஆஞ்ஜனேயர் கோவில்
துணுக்காய் விநாயகர் கோவில்
மண்டைதீவு முத்துமாரி அம்மன் ஆலயம்
அச்சுவேலி, தம்பாலை ஞானரவவர் கோவில்
யாழ். சிறாம்பியடி வேப்பங்காளி கோவில்
ஆரியகுளம் சந்தி வைரவர்
நல்லூர் அரசடி செல்லப்பிள்ளையார்
பழம்ரோட் ஸ்ரீ ஞான வைரவர்
கச்சேரி ஸ்ரீ ஞானவைரவர் கோவில்
கடைச்சாமி பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் கோவில்
கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி கோவில்
திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தி வீரகத்தி விநாயகர் ஆலயம்
நாவாந்துறை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
கந்தர்மடம் உதயா நாகபூஷணி அம்மன் கோவில்
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கோவில்
சட்டநாதர் சிவன்கோவில் நல்லூர்
நாவலப்பிட்டி கதிரேசன் மகாவித்தியாலய பிள்ளையார் கோவில்
மந்திகை வீரபத்திரர் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் பாலாவோடை குறிஞ்சிக்குளி முத்துமாரி அம்மன் (சர்வபோதகம்)

சாரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் கோவில் (சர்வபோதகம்)

கைதடி தக்கடியான் புலம் ஸ்ரீ ஞானவைரவர் கோவில் சர்வ போதகம்

கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசாமி கோவில் (சர்வபோதகம்)

கஜுனாபீச் ஆஞ்ஜனேயர் கோயில்

காரைநகர் வலந்தலை கண்ணகை அம்மன் கோவில்

வைமன்ரோட் வைரவர் ஆலயம்

காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயம்

வல்வை, கொற்றாவத்தை பிள்ளையார் கோவில்

உடுவில் பஞ்சமுகப் பிள்ளையார் கோவில்

நவக்கிரி நாகபூஷணி அம்மன் கோவில்

கோயிலாக்கண்டி ஸ்ரீ ஞானவைரவர் கோவில்

உடுப்பிட்டி காளிகோவில்

உடுப்பிட்டி இராஜராஜேஸ்வரி அம்மன் கோவில்

அராலி வண்ணப்பரம் சிவன் கோவில்

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாட் பேராசிரியர், கலாநிதி, பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களின்

## இரங்கலுரை

யாழ்ப்பாணம் வண். வட கிழக்கில் அமைந்துள்ள கொண்டலடி விநாயகர் ஆலயம் கந்தர்மடம் ஞானவைரவர் ஆலயம் யாழ்ப்பாணம் சாத்திரச் சந்தி ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றின் பிரதமகுருவாக விளங்கிய சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் மற்றும் அவரது புதல்வர் சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த கவலைக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. அவர்களது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் சுற்றத்தவர்களுக்கும் அவரகள் குருத்துவப் பணி புரிந்த ஆலயங்களின் அடியார்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களது திடீர் மறைவினால் ஆழ்ந்த கவலையில் மூழ்கியுள்ள அவர்களது குடும்பத்தினர் மனச் சாந்தி பெற்று அமைதி பெற இறையருளை வேண்டுகின்றோம். மனிதனாகப் பிறந்தவன் என்றோ ஒருநாள் மறைவது இயற்கை நியதி என்பதை மனதிற் கொண்டு ஆறுதல் அடைவதைத் தவிர எமக்கு வேறு வழி இல்லை.

நா. பாலன் என அனைவரது அன்பிற்கும் அபிமானத்துக்கும் பாத்திரமாக விளங்கிய குருமணி சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள், மேற்குறித்த ஆலயங்களில் குருத்துவப்பணியாற்றி அனைவரது அன்பிற்கும் ஆதரவுக்கும் உரியவராக விளங்கியவர். தன்டைக்கம், கடமையுணர்வு மிக்க குருமணியாக விளங்கியதோடு தமது சக குருமணிகளுடன் இன்முகத்துடன் பழகியவர். தாம் பெற்ற குழந்தைச்செல்வங்களின் சகல பொறுப்புக்களையும் நிறைவேற்றி அவரது பதல்வர்களை குருத்துவப் பணியில் ஈடுபடுத்தி இன்பங்கண்டவர். அவரது மூத்த புதல்வர் சிவஸ்ரீ பா. ஸ்கந்தரூபக் குருக்கள் அண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக வைபவத்தையும் வருடாந்த மகோற்சவத்தையும் ஆலய அறங்காவலர் மற்றும் அடியரர்கள் மதித்துப்போற்றும் வண்ணம் பக்தியுடன் நிறைவேற்ற அவரது தந்தை சிவஸ்ரீ நா. பாலன் உறுதுணையாக விளங்கியவர். சிவஸ்ரீ நா. பாலனின் புதல்வர் சிவஸ்ரீ பா. சந்தஸ்வரூபக்குருக்களும் இளவயதினராக இருந்தவிடத்தும் குருத்துவப்பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டவர். யாழ். இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள வண். வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்தை நிகழ்த்தி ஆலய அடியார்களது பக்திக்கு உறுதுணை புரிந்தவர். சிவஸ்ரீ நா. பாலன் சத்திரச் சந்தி ஞானவைரவர் ஆலயத்தில் வருடந்தோறும் நிகழும் மாட்டுப் பொங்கல் விழா மிகச் சிறப்பாக நடைபெற சிவஸ்ரீ நா. பாலன் அவர்களும் அவரது புதல்வரும் உறுதுணையாக விளங்கிய வர்கள்.

இத்தகைய சிறந்த குருத்துவப்பணியாற்றிய சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களதும் அவர் தம் புதல்வர் சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக்குருக்கள் அவர்களதும் ஆத்மா, சாந்தி பெற்று இறைவனது திருவடிகளில் நித்திய அமைதி பெறுவதாகுக. சிவஸ்ரீ நா. பாலன் விட்டுச் சென்ற ஆலயப் பணிகளை அவர்தம் புதல்வர்கள் தெடர்ந்தும் சிறப்புற நடாத்தி சைவ உலகுக்கு அருந் தொண்டாற்றுவதே அவர்தம் தந்தைக்குச் செலுத்தும் உன்னதமான நன்றிக் கடனாகும். அத்தகைய இறைபணி தொடர இறையருள் துணை நிற்பதாகுக.

ஓம் சாந்தி!சாந்தி!சாந்தி!!!

**பேராசிரியர், இலக்கிய கலாநிதி**
**ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பழ்கலைக்கழகம்.
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

024 222 3938

Sanskritbandit, Sikshanipuna
Sivasri.K.Sathasivakurukkal
(Madduvil)
38/1, Sinnaputhukulam,
Vavuniya.

சம்ஸ்கிருதபண்டிதத, சிக்ஷாநிபுண
சிவஸ்ரீ. கி. சதாசிவக்குருக்கள்
(மட்டுவில்)
38/1, சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

# அஞ்ஜலியுரை

**சிவஸ்ரீ பால ஸ்கந்தரூபக் குருக்கள் தம்பதிக்கட்கு,**

**இறைகளோடு இசைந்த இன்பத்தோடு**

**இசைந்த வாழ்வு பொற்று"** எதிர்பாரத வகையில் இயற்கையெய்திய தங்கள் தந்தையாரின் மறையுவும் அன்புச் சகோதரரின் மறைவும் எவ்வகையிலும் ஆறதல் கூற முடியாத ஈடு செய்ய முடியாத பேரிழப்பாக அமைந்துவிட்டது. ஆறுதல் கூற வார்த்தைகளே வரவில்லை. என்ன செய்வது? எல்லாம் அவன் செயல் என எண்ணி மனதைத் தேற்றதோடு "முன் செய்த தீவினையோ வந்து மூண்டதுவோ" என்னும் பட்டினத்தார் பாடலை நினைவுகூர்ந்து ஆறதல் பெற வேண்டியதே நாம் செய்யக்கூடிய செயலாகும். குடும்பப் பொறுப்புக்கள் தலைமேல் வந்தாலும் மனம் தளராமல் தந்தையாரின் (சகோதரரின்) ஆத்மசாந்திக் கிரியைகளை செவ்வனே செய்து அவர்களின் ஆசீர்வாதம் பெற்று நலமாக வாழ எல்லாம் வல்ல இறையருளைப் பிரர்த்திப்போம்.

தந்தையாரின் இனிய நண்பரான எனதும் எமது குடும்பத்தாரினதும் இதயங்கனிந்த ஆழ்ந்த அனுதாபங்களை இத்துடன் தெரிவிக்கின்றோம். அத்துடன் அவர்களின் ஆத்மா சாந்தி நிலை பெறும் வண்ணமே எல்லாம் வல்ல கொண்டலடி விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்கி,

*ஊநாயாஸெந உாணம் விநா ஸைெநெ்நந ஜீவநம்*
*ஸெஹாஸெ தவ ஸாயுஜ்ஞம் ஸெஹி ஸெ வாவபூதீவதெ*

என இறைவனைப் பிரார்த்திப்போமாக! சாந்தி

அன்புடன்

**சிவஸ்ரீ கி. சதாசிவசர்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோவில்
35800, தமன் செரோஜா, ஸ்லிம் ரிவர் பார்க்,
மலேஷியா

# கண்ணீர் அஞ்ஜலி

எமது ஆலயக் குருக்கள் ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் அவர்களின் அன்புத் தந்தையும், அவரது சகோதரலும் இறைவனடி சேர்ந்துவிட்னர்.

ஆலய நிர்வாகத்தின் ஆழ்ந்த அனுதாபங்கள். அவர்களின் அந்திமக் கிரியைகள் நல்லபடி நடைபெற்று அவரகளது ஆத்மா இறையடியில் அமைதிகாண்பதற்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் நமசிவாய.

பி. கஜராஜா
**தலைவர், மற்றும் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# B. Vasantha Gurukkal BA (Hons)



சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்
கற்பகபதி
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்



**ஆத்மாக்கள் அரன் அடி அடையட்டும்**

யாழ் மண்ணில் அனைவராலும் நாவன்னா என்று அன்போடு அழைக்கப்பட்ட மதிப்பிற்குரிய சிவஸ்ரீ நா. பாலசுப்ர மணியக் குருக்கள் அவர்களினதும் அவருடைய புதல்வருள் ஒருவரான சாந்த சொரூபசர்மா அவர்களதும் ஆத்மா தேக வியோகம் அடைந்த செய்தி அனைவரையும் ஆழ்ந்த கவலைக்குள் அமிழ்த்தி விட்டது. இது துயரத்தில் துயரமாகும். அவர்கள் யாழ் கச்சேரி வைரவர்கோவில் பணியாற்றியப் காலம் முதல் எம்மோடு அன்பாக பழகி வந்தவர். அவர்கள் பணியாற்றும் கோவில்களுக்கெல்லாம் எம்மையும் அழைத்து மகிழ்ந்து திரிந்தவர்.

அவர்களுடைய மூத்த புதல்வன் ரூபன் குருக்கள் மற்றும் புதல்வர்கள் ஆரம்ப காலத்தில் நம்மிடம் சமஸ்கிருதம் கற்க வரும்போது மிகவும் ஆனந்தமாக எம்மோடு அளவளாவினார்கள். எல்லோருடனும் நல்ல மதிப்புக் கொடுத்து பேசுவார்கள். அண்மையில் காரைநகர் வாரிவளவுக் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டபோது பழைய நல் நினைவுகளுடன் அனைவரோடும் சந்தோசமாக கதைத்து மூத்த புதல்வன் ரூபன் குருக்கள் அவர்களது கிரியை வழிபாட்டைப் போற்றி மனம் களிப்படைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பவும் ஒரு சிரிப்புடன் எதையும் சமாளிக்கும் அவரது வாழ்வில் இவ்வாறான துயரம் வந்தது விதியின் நுழைவு என்றே நாம் நினைக்கத் தோன்றுகிறது. தமது பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் அனைவரையும் நல்ல முறையில் வாழ வைத்து வாழ்ந்துவரும் அவர்களது பாதையில் தனது பிள்ளை ஒருவருடன் சேர்ந்து இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கொண்ட பரிதாபமான துயரத்திலும் துயரமான செய்தி எம்மவர் மத்தியில் என்றும் மாறாத கவலையாக இருக்கும்.

அவர்கள் இருவரது பிரிவு என்றும் மறக்க முடியாதது. பிரிவில் அல்லலுறும் அவர்களது குடும்பத்தினர்க்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து இப்புண்ணிய ஆத்மாக்கள் அரன் அடி அடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

வசந்தன் குருக்கள் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சபரிபீட
# ஸ்ரீதேவி குருகுலத்தின் பிரார்த்தனையுரை

எமது அன்பிற்கும் மரியாதைக்குமுரிய சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள் மற்றும் அவர்தம் புத்திரன் பிரம்மஸ்ரீ பால. சாந்தரூபக் குருக்கள் ஆகியோரின் சடுதியான மறைவுச் செய்தி கேட்டுப் பேரதிர்ச்சியடைந்தோம்.

அமரர்களின் மரணச் செய்தியை இன்னும்தான் ஜீரணிக்கமுடியவில்லை. ஆலயங்களிலே விழாக்களாகட்டும், எமது பிராமண சமூகத்தவரின் இல்ல நிகழ்வுகளாகட்டும் அன்னார் குடும்ப சமேதராக வருகைதந்து சிறப்பிக்கும் செயலை அனைவருமே விதந்து போற்றுவர்.

ஆலய நிகழ்வுகளிலே செம்மையாகக் கிரியைகளைச் செய்யவேண்டும் என விரும்பி அண்மைக் காலங்களில் அடியேனையும் அழைத்துச் சிறப்புச் செய்த பெருமைக் குரியவர். அவர்களோடு பழகிய அந்தத் தருணங்கள் மறக்கற்பாலன அன்று. விதிவசத்தால் அன்னாரும் அருமை மகனும் எம்மை விட்டுப் பிரிந்ததை எண்ணிக் கலங்கி நிற்கும் உறவுகளுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் தானெங்கே? அமரர்களின் நினைவாக வெளிவரும் இம் மலருக்கு, செய்வதறியாது துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் துயரத்தில் பங்குகொண்டு அவர்தம் ஆத்மா சாந்திபெற எனது பிரார்த்தனைகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

**சர்வசாதக சக்கரவர்த்தி,**
**டாக்டர் அருள்ஜோதி, ஸ்கந்த. சாம்பசிவ.**
**ஜெகதீஸ்வர சிவாசாரியார். J. P.**
**ஆதீனகர்த்தா, நாயன்மார்பதி, மஹாமேருபுரம்,**
**ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்.**
**யாழ். நாயன்மார்கட்டு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமாரில் முத்திரை பதித்தவர்

சிவாசார்ய செம்மலாகத் திகழ்ந்த சிவஸ்ரீ நா. பால சுப்பிரமணியக் குருக்கள், யாழ் குடாநாட்டில் நாலாதிசைகளிலும் தம் கிரியை நெறிகளால், தம் முத்திரையைப் பதித்தவர். சமயக் கிரியைகளோடு நின்றுவிடாமல், அவற்றின் பொருள், தத்துவம் என்பன எல்லோருக்கும் விளங்கவேண்டும் என என்னையும் பல ஆலயங்களுக்கு அழைத்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய பெருமைக்குரியவர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் எனப் பல பிரதேசங்களிலும் பல்வேறு சிறிய சிறிய கோயில்களை யெல்லாம் புனருத்தாரணம் செய்வித்து மகாகும்பா பிஷேகங்கள் மகோற்சவங்கள் நிகழ வழிகாட்டினார். மூத்த மகன் சிவஸ்ரீ பால. ஸ்கந்தரூபக் குருக்கள் 33யாககுண்டங்கள் அமைத்து மகாகும்பாபிஷேகம் செய்த காலத்தில் பிரதமகுருவாக இருந்து மகாகும்பாபிஷேகத்தை நிறைவேற்றிவைத்தவர்.

தம்மைவிடத் தம் பிள்ளைகள் உயர்வாக இருத்தல்வேண்டும் என அவர்களைக் கற்பித்துச் சிறுவயதிலேயே சிவாசாரியர்களாக உருவாக்கி சைவசமயப் பணிக்கு ஆளாக்கிய பெருமைக்குரியவர்.

சிரித்த முகம், இனிமையான பேச்சு, எல்லோரையும் கவரும் செயற்பாடுகள், ஓடி ஓடிப் பணி செய்தவர் அறுபது வயதாகிவிட்டது ஓய்வு பெறுவோம் என எண்ணினாரோ என்னமோ, தன் பணியிலிருந்து இளைப்பாறாது இவ்வுலகத்தையே விட்டுப் போனமை எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்துகிறது. மேலும் இணைபிரியா மகனையும் தம்முடன் அழைத்துச் சென்ற மாயம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மால் எது செய்யமுடியும்? மண்ணில் பிறந்தார் ஒருநாள் இறப்பது நியதி. இருக்கும் காலத்தில் நல்ல பணிகள் செய்துபுகழுடம்பு இறவாமல் என்றும் இருக்கச்செய்வதே புத்திசாலியான மனிதர்களின் செயற்பாடாகும்.

அமரர்களின் ஆத்மா தில்லைநடராஜப் பெருமானது திருவடிகளில் அமைதி பெறப் பிரார்த்திக்கிறேன்.

**சைவச் சொற்பொழிவாளர், சைவ வர்ணனையாளர், கலைஞானி, சைவப்புலவர், செ. கந்த சத்தியதாசன். ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேதனையில் தவிக்கும் உங்களுக்கு தேவசமாதனம் உண்டாவதாக.**

கர்த்தருக்குள் அன்பானவர்களே,

பத்திரிகையில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்பை வாசித்தோம். மரணத்தில் எமக்கு அன்பான ஒருவரை இழப்பது தாங்கமுடியாத சோகத்தை உண்டாக்கும். என்றாலும் மனிதர்களால் ஆறுதல் சொல்ல முடியாது. ஆனால் உங்களைப் படைத்த தேவனால் மட்டும் உங்களுக்கு ஆறுதல் தரமுடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுகாக மரித்தார். எல்லோரைப் போலவும் அடக்கம் பண்ணப்பட்டடார். ஆனால் இயேசு மூன்றாம் நாள் மரணத்தை ஜெயித்து உயிரத்தெழுந்தார். இன்றும் எம்முடன் வாழுகின்றார். ஆகவே, நீங்களும் பயப்படாதிருங்கள் வேதாகமம் இப்படிக் கூறுகின்றது.

**சங்கீதம் 48:14: இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன் மரணபரியந்தம் நம்மை நடத்துவார்**

**வெளிப்படுத்தல் 21:4: அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் இனி மரணமில்லை. துக்கமில்லை.**

**எபிரெயர் 13:8:இயேசு கிறஸ்து நேற்றும் இன்றும்** மாறாதவராயிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரோமர் 6:23:பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறஸ்த்துவினால் உண்டான நித்திய ஜீவன்.**

**1கொரிந்தியர் 15:26: பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.**

**1 தெசலோனிக்கேயர் 4:14: இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருக்கிறார் என்று விசுவாசிக்கிறோமே அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார்**

**மத்தேயு 11:28: வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

நாமும் உங்கள் துக்கத்தில் பங்கெடுக்கிறோம். இந்த துக்கத்தை தாங்கிக் கொள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்குரிய பலனைத் தரவேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றோம்.

தைரியமாயிருங்கள்! உங்களை நாங்களும் நேசிக்கின்றோம்.

உங்களின் துயரில் பங்கெடுக்கும், கல்வாரி குடும்பம்

கர்த்தரின் பணியில்

........................

மேலதிக தொடர்புகளுக்கு: கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயம், இல:89 பிறவுன் வீதி, கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவ காலத் திருமுறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவத்தின்போது
## தம்பத்தடியில் ஓதப்படவேண்டிய திருமுறைகள்

### கணபதி தாளம்

பண் : தக்கராகம் இராகம் : காம்போதி

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ. - சம்பந்தர்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க,
சுடர்ச்சடை சுற்றி முடித்து,
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ,
ஆரிடமும் பலி தேர்வர்;
அணிவளர் கோலம் எலாம் செய்து,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட
மயல் செய்வதோ, இவர்மாண்பே?. - சம்பந்தர்

மாந்தர் தம் பானறு நெய்மகிழ்ந் தாடி
வளர்ச டைமேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழ றாளமொர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தார் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலை வாடச்
சதுர் செய்வதோ விவர் சார்வே. - சம்பந்தர்

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொண்ர்ந்தெற்றி யோர் பெண்ணைவடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தாவுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே- சுந்தரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூஷிக தாளம் - விநாயகருக்கு
## விருஷப தாளம் - சிவன், அம்பாள்.

பண் : காந்தாரபஞ்சமம் இராகம் : கேதாரகௌளை

இடரினும் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழல் தொழு தெழுவேன்
கடல்தனி லமுதோடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே.

இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

-சம்பந்தர்

துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே.

- சம்பந்தர்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

- அப்பர்

பிழைத்த பிழையொன் றறியேனான் பிழையைத்தீரப் பணியாயே
மழைக்கண்நல்லார் குடைந்தாட மலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் சுழனிமண்டிக் கையேறி
அழைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ.

- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிம்ம தாளம் - அம்பாள்.

பண் : நட்டபாடை இராகம் : கம்பீரநாட்டை

மையாடிய கண்டன்மலை மகள் பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய ஒருவன்
செய்யாடிய குவளைம் மலர் நயனத் தவனோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே

- சம்பந்தர்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவ னன்றே.

- சம்பந்தர்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே.

- சுந்தரர்

அங்கம்மொழி அன்னாரவ ரமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்நகரில்
பஞ்சுகஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே

- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயூர தாளம் - முருகன்

பண் - இந்தளம் இராகம் - மாயாமாளவகௌளை

விண்ணிலான பிறைசூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினால் தங்கன்னுடலம் பொடியாக்கினார்
பண்ணி லானவிசை பாடன்மல் குந்திருவாஞ்சியத்
தண்ணலார் தம்மடிபோற்ற வல்லார்க்கில்லை யல்லலே.
- சம்பந்தர்

இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணான்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவ ரெய்தின தாமே. - அப்பர்

தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேற் கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டசைத்த தென்னே
அதன்மேற் கதநாகங்கச் சார்த்த தென்னே
மலைக்கு நிகர் ஒப் பனவன் திரைகள்
வலித்தெற் றீமுழங் கிவலம் புரிகொண்
டலைக்குங் கடலங் கரைமேல் மகோதை
அணியார் பொழில்அஞ் சைக்களத் தப்பனே
- சுந்தரர்

சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே.
- சம்பந்தர்

பித்தாப்பிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லே னெனலாமே - சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

## கொடியேற்றத்திற்கு ஆயத்தமானதும் பாடப்படுவது

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே யிடம்ஒன்று மேவிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராம்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிர் அருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

பொருளாம் பொருளேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது -அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி.

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

- உமாபதி சிவாச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்கள்

### பிரம்ம சந்தி

பண் - மேகராகக்குறிஞ்சி இராகம் - நீலாம்பரி

அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம் பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால் ஈசனடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமருலகில் தவநெறிசென் றெய்துவார் தாழாதன்றே.

நீறு சேர்வதோர் மேனியர் நேரிழை
கூறு சேர்வதோர் கோல மாய்ப்
பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர் சடை அண்ணலே.

-சம்பந்தர்.

செல்வ மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற்சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன் செந்தமிழ்
செல்வமாய் இவை செப்பவே.

-சம்பந்தர்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான் அமரும்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவை யாறே

-சம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திர சந்தி (கிழக்கு)

பண் - காந்தாரம் இராகம் - நவரோஸ்

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசைகெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயான் திருநீறே

- சம்பந்தர்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடாத் திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை.

-அப்பர்

மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம்
துறையுந் தோத்திரத்திறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனலானைக் காவுடை யாதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே.

-சுந்தரர்

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனு அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

-அப்பர்

மாதர்ப்பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறி யாதன கண்டேன்.

-அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கினி சந்தி (தென்கிழக்கு)

பண் - கொல்லி இராகம் - நவரோஸ்

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடு
பந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே

-சம்பந்தர்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர்குறைவு இல்லை
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

- சம்பந்தர்

கூற்றாயின வாறு விலக் ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

- அப்பர்.

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்பினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள் வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

- சுந்தரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யமசந்தி (தெற்கு)

பண் - கௌசிகம் இராகம் - பைரவி

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம்அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

-சம்பந்தர்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

-சம்பந்தர்.

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

- அப்பர்

இயமன் தூதரு மஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சிவாயவே.

சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருதிசந்தி (தென்மேற்கு)

பண் - நட்டபாடை இராகம் - கம்பீரநாட்டை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவன்றே.

சம்பந்தர்.

வெம்புந்திய கதிரோன்ஒளி விலகும் விரி சாரல்
அம்புந்திமூ எயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர் காழியுள் ஞான
சம்பந்தன் தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே.

சம்பந்தர்.

பண்ணின் தமிழிசை பாடலின் பழவேய் முழவதிரக்
கண்ணின் ஒளிகனகச் சுனை வயிரமவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக் கொண்டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதார மெனீரே.

சுந்தரர்.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருணசந்தி (மேற்கு)

பண் - சீகாமரம் இராகம் - நாதநாமக்கிரியை

மட்டிட்ட புன்னயைங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணோதே போதியோ பூம்பாவாய்.

சம்பந்தர்

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்.

- சம்பந்தர்.

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம் போகீஎன்றானே.

- சுந்தரர்.

கண் காட்டும் நுதலானும், கனல்
காட்டும் கையானும்,
பெண் காட்டும் உருவானும்
பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர்
காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும் விடை
காட்டும் கொடியானே.

- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயுசந்தி (வடமேற்கு)

பண் - தக்கேசி இராகம் - காம்போதி

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரி தோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவென நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநக ராரே.

சம்பந்தர்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே.

சுந்தரர்.

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை,
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

- சுந்தரர்

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவி தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையும் சாரல் அண்ணா மலையாரே

- சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குபேர சந்தி (வடக்கு)

பண் - தக்கராகம் இராகம் - காம்போதி

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப்
பூதகணம் புடை சூழக்
கொடியுடை யூர் திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங் கண்உமை பாகம்
ஆயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக்
கறைமிடற் றானடி காண்போம்

-சம்பந்தர்.

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி
செங்கண்மலர்ப் பங்கயமாகச் சிறந்தானுக் கருளி
இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள்முரித்த இறையவன் ஊர்வினவில்
பெருமேதை மறையொலியும் பேரிமுழவு ஒலியும்
பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக்
கருமேதி புனல்மண்டக் கயல்மண்டக் கமலங்
களிவண்டின் கணம்இரியும் கலயநல்லூர் காணே.

சுந்தரர்.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க,
சுடர்ச்சடை சுற்றி முடித்து,
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ,
ஆரிடமும் பலி தேர்வர்;
அணிவளர் கோலம் எலாம் செய்து,
பாச்சிலாச் சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ, மங்கையை வாட
மயல் செய்வதோ, இவர்மாண்பே?. - சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசான சந்தி (வடகிழக்கு)

பண் - சாலாபாணி (பதிலாக - சாதாரி) இராகம் - பந்துவராளி

பாடன்மறை சூடான்மதி பால்வளையொர்
பாகமதின் முன்றொர் கணையால்
கூடவெரி யூட்டியெழில் காட்டி நிழல்
கூட்டு பொழில் சூழ்பழைசையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.

சம்பந்தர்

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீர்உமைப்பணிபவர்
அடைவதும் அமருலகதுவே.

அப்பர்

தலையே நீ வணங்காய் -தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்

-அப்பர்.

எந்தமது சிந்தை பிரியாத பெருமா னெனஇறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்ய வளர் தூபமொடு தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர் கின்றஅழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பை நகரே

சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத் தேன் துளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் பாடல்கள்

மஹாகணபதிம்.......

ராகம்: நாட்டை தாளம்: ஆதி

முத்துஸ்வாமி தீட்சிதர்

### பல்லவி

மஹா கணபதிம் மனசா ஸ்மராமி
வஸிஷ்ட வாம தேவாதி வந்தித (மஹா)

### அனுபல்லவி

மஹாதேவ சுதம் குருகுஹ நுதம்
மாரகோடி ப்ரகாசம் சாந்தம்

மஹா காவ்ய நாடகாதி ப்ரியம்
மூஷிக வாஹன மோதக ப்ரியம் (மஹா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரண முகவா.......

இராகம் - ஹம்ஸவத்வனி　　　　தாளம் -ரூபகம்

### பல்லவி

வாரண முகவா துணை புரிவாய்
அருள் புரிவாய் தயவாய்
(வாரண)

### அனுபல்லவி

ஆரணப் பொருள் ஆன கந்தா கானா முதத்திற்குள்
கருணா முதமுத லிய அருள்மத (வாரண)

### சரணம்

இன்னிசை இயல் இலக்கியம்
ஆரியம் தமிழ் அறிவேது மின்றி
கன்னலன் இக்கந்த கானாமுத நல்லூனலை
உண்ணும் கவி குஞ்சர தாசன் நான்
உன்னருள் கொண்டே பன்னத் துணிந்தேன்
முன்னவனே நீ முன்னின்றால்
முடியாத தொன்றில்லை ஆகையால்
அதி வேகமாய் அருமத (வாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாதாபிகணபதிம்.......**

**இராகம் - ஹம்ஸவத்வனி		தாளம் - ஆதி**

**பல்லவி**

வாதாபி கணபதிம் பஜேஹம்
வாரணாஸ்யம் வரப்ரதம் - ஸ்ரீ

(வாதாபி)

**அனுபல்லவி**

பூகாதி ஸம் ஸேவித சரணம்
பூத பௌதிக ப்ரபஞ்ச பரணம்
வீத ராகிநம் வீதித யோகினம்
விஸ்வ காரணம் விக்ன வாரணம்.

(வாதாபி)

**சரணம்**

புரா கும்ப ஸம்பவ முனிவர
ப்ர பூஜிதம் திரிகோண மத்யகதம்
முராரி ப்ரமுகாத் யுபாஸிதம்
மூலாதார க்ஷேத்ர ஸ்த்திதம்
பராதி சத்வாரிவா காத்மகம்
ப்ரணவ ஸ்வரூப வக்ரதுண்டம்
நிரந்தரம் நிடில சந்த்ர கண்டம்
நிஜவா மகரவி த்ருதேக்ஷு தண்டம்
காரம்புஜ பாச பீஜா பூரம்
கலுஷவிதூரம் பூதாகாரம்
ஹராதி குருகுஹ தோஷித பிம்பம்
ஹம்சத்வனி பூஷித ஹேரம்பம்

(வாதாபி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி நந்தன......

**இராகம் - வர்ணமெட்டு** **தாளம் - ஏகம்**

**பல்லவி**

கௌரி நந்தன கஜவதனா
கணேச வரதா மாம்பஹி
அம்பிகை பாலா அன்பர்கள் சீலா
தும்புரு நாரத சேவித லோலா - கௌரி

**சரணங்கள்**

பாரதம் எழுதிய சரித்திரா
ஆரமுது அருளிய ஐங்கர சித்திரா
லம்போதர கங்காதர புத்ரா
அம்பாமுக பங்கேருக மித்திரா - கௌரி
கஜமுகத் தரசே கணபதியே
கற்பகத் தருவே குண நிதியே
அரகர அரகர ஆதியனே
அரனருள் வீனாயக சோதியனே - கௌரி

பிரணவப் பொருளே பெம்மானே
பேசரு மறைபுகழ் எம்மானே
இப மாமுகனே இகமா வரதா
சுப முாகவுமே சுமுகா அருள்வாய்
ஸ்ரீ ஜெய சீல வீனாயகனே
தேவர் தொழும் தெய்வ நாயகனே- கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவன் பாடல்கள்

சபாபதிக்கு.........

ராகம்: ஆபோகி தாளம்: ரூபகம்

### கோபாலகிருஷ்ண பாரதி

### பல்லவி

சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா? - தில்லை
சபாபதிக்கு வேறு தெய்வம் சமானமாகுமா?
(சபாபதிக்கு....)

### அனுபல்லவி

க்ருபாநிதி இவரைப்போல
கிடைக்குமோ இந்தத் தாரணி தன்னிலே (சபாபதிக்கு....)

### சரணம்

ஒருதரம் சிவசிதம்பரமென்று சொன்னால் போதுமே
பரகதிக்கு வேறு புண்ணியம் பண்ண வேண்டுமோ?
அரிய புலையன் மூவர் பதமடைந்தாரென்றே புராணம்
அறிந்து சொல்லக் கேட்டோம் கோபால கிருஷ்ணன் பாடும்
(சபாபதிக்கு....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடது பதம் தூக்கி........

**இராகம் - கமாஸ்** **தாளம் - ஆதி**

### பல்லவி

இடது பதம் தூக்கி ஆடும் - நட
ராஜனடி பணிவையே நெஞ்சே (இடது)

### அனுபல்லவி

படவரவாட புலியதளாட
பக்தர்கள் ஜய ஜய எனவே
புலி பதஞ்சலி இருகண் குளிரத் தில்லையிலே (இடது)

### சரணம்

திருவடி சிலம்புகள் கலீர் கலீர் என
திருமுடி இளமதியொளி பளீர் பளீர் என
திமிதக தரிகிட தோம் எனத் திருமால் மத்தளம் அதிர
சிவகாமி மணாளன் திருச்சிற்றம்பலம் தனிலே
- புன்னகையோடு (இடது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிக்கொண்டார்........

**இராகம் - மாயாமாளகெளளை தாளம் - ஆதி**

### பல்லவி

ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை கணக்கண்
ஆயிரம் வேண்டாமோ (ஆடி)

### அனுபல்லவி

நாடித்துதிப்பவர் பங்கில் உறைபவர்
நம்பர் திருச்செம்பொன் னம்பல வாணன் (ஆடி)

### சரணம்

ஆரநவமணி மாலைகள் ஆட
ஆடும் அரவம் படம் விரித்தாட
சீரணி கொன்றை மலர்த்தொடையாட
சிதம்பரத்தேர் ஆட
பேரணி வேதியார் தில்லைமூவாயிரம்
பேர்களும் பூஜித்துக்கொண்டு நின்றாட
காரணிகாளி எதிர்த்து நின்றாட
கனகசபைதனிலே................... (ஆடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போ... சம்போ.......**

இராகம்- ரேவதி

போ சம்போ சிவசம்போ ஸ்வயம்போ

நிர்க்குண பரப்ரம்ம ஸ்வரூபா
கமகம பூஜா ப்ரபஞ்ச ரஹிதா
நிஜபுர நிகிதகிதாந்த கநந்தா
ஆனந்த அதிசய அட்சய லிங்கா

திமித திமித திமி திமிகிட கிடதோம்
தோம் தோம் தரிகிட தரிகிட கிடதோம்
மதங்க முனிவர வந்தித ஈசா
சர்வவிதங்கர வேஷிக வேஷா
நித்ய நிரங்சன நித்ய குணேசா
ஈசா சர்வேசா சர்வேசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மன் பாடல்கள்

### அம்ப நீ இரங்காயெனில்.........

ராகம்: அடானா தாளம்:

### பல்லவி

அம்ப நீ இரங்காயெனில் புகலேது
அம்ப நீ கிலேசகன் நாதன் மார்பில் உறைதிரு
(நீ இரங்காயெனில......)

### அனுபல்லவி

தாயிரங்காவிடில் சேயுயிர் வாழுமோ
சகல உலகிற்கும் நீ தாயல்லவோ
(அம்ப நீ இரங்காயெனில்....)

பாற்கடலில் உதிதத் திருமணியே
சௌபாக்ய லட்சுமி என்னைக் கடைக்கணியே
நாற்கவியும் பொழியும் புலவோர்க்கும்
மெய்ஞ்ஞானியர்க்கும் உயர் வானவர்க்கும்
(அம்ப நீ இரங்காயெனில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசக்ர ராஜ .........

ராகம்: ராகமாலிகை தாளம்: ஆதி

செஞ்சுருட்டி

ஸ்ரீசக்ர ராஜ சிம்மாசனேஸ்வரி
ஸ்ரீலிதாம்பிகையே புவனேஸ்வரி
ஆகம வேத கலாமய ரூபிணி
அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோஹரி
ஞான வித்யேஸ்வரி ராஜராஜேஸ்வரி
(ஸ்ரீசக்ர ராஜ......)

புன்னாகவராளி

பலவிதமாயுன்னை பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடுமன்பர் பதமலர் சூடவும்
உலகமுழுதும் என தகமுறக் காணவும்
ஒருநிலை தருவாய் காஞ்சி காமேஸ்வரி
(ஸ்ரீசக்ர ராஜ......)

நாதநாம க்ரியா

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிடக் கூட்டிவைத்தாய்
நிழலெனத் தொடர்ந்த முன்னூழ் கொடுமையை நீங்கச் செய்தாய்
நித்யகல்யாணி பவானி பத்மேஸ்வரி
(ஸ்ரீசக்ர ராஜ......)

சிந்துபைரவி

துன்பப் புடத்திலிட்டு தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்தமுன் மாயம் நீக்கி பிறந்த பயனைத் தந்தாய்
அன்பைப் புகட்டி உந்தன் ஆடலைக் காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண்டேஸ்வரி
(ஸ்ரீசக்ர ராஜ......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்த ஜனப் பிரியை

ராகம்: பிலஹரி

பல்லவி

சுந்தரி தந்திர மந்திர யந்திர சூக்கும ரூபிணியே - என்றும்
எந்தன் மனத்தினி லேவிளை யாடிடும் இன்னமுதே லலிதே

சுந்தரி தந்திர......

அனுபல்லவி

சந்திரமண்டல மத்தியிலேயுறை சாந்தினியே உமையே - எழில்
சிந்திடும் சிந்துர திலகமுகம் தினம் காத்திடுமே எமையே

சுந்தரி தந்திர......

சரணம்

பந்தித பாப விநாசினி பைரவி பக்தஜன பிரியே
செந்தமிழால்கவி செய்யும் சிவம்பணிந் தேத்தும் கவிப் பிரியே
இந்திர னாதியர் ஏத்தி வணங்கிடும் எங்கள் குகப் பிரியே
வந்து நிதம் அருள் தந்திடு தேவி என் வாழ்க்கையெல்லாம் நீயே

சுந்தரி தந்திர......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவுளம் இரங்காயோ?

ராகம்: நவரஸ கன்னட

பல்லவி

ஸ்ரீலலிதே என்னை நினையாயோ - உந்தன்
சேயல்லவோ அடியேன் எனக்கருளைத் தர
ஸ்ரீலலிதே என்னை........

அனுபல்லவி

ஆலம துண்டவனின் நஞ்சமுதாக்கிய நீ
மாலும் எனக்கருள்தல் ஆகாதா?......... தேவீ...
ஸ்ரீலலிதே என்னை........

சரணம்

உனதடிகள் நினைந்தே அம்மா அம்மா என்றே
உருகுவது தெரியாதோ?
எனது துயர் போக்கி இருவினைகள் நீக்கத்
திருவுளம் இரங்காதோ? .... தேவீ...
ஸ்ரீலலிதே என்னை..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னமும் சோதனை தானா?

ராகம்: தோடி

பல்லவி

இன்னமும் சோதனை தானா - தேவீ
எந்தனின் கண்ணீர் உனக்கென்ன தேனா?

இன்னமும்........

அனுபல்லவி

உன்னை வணங்குபவர் வாழ்வில் உயர்வர் என்றே
உரைக்கும் உரைகள் எல்லாம் பொய்யுரை தானா?

இன்னமும்.......

சரணங்கள்

கன்னலிலே குழைத்துக் கவியமுது படைத்தேன்
காலமெல் லாம் உனது கழலிணைகள் தொழுதேன்
சின்ன வயதுமுதல் சிந்தையில் உனைப் பதித்தேன்
சிறியேனுக் கருள்புரிய இன்னமும் ஏன் தயக்கம்?

இன்னமும்.....

துன்பப் பெருஞ் சுமைகள் தாங்கும் வலிமை இல்லேன்
தூயஉன் புகழ்க்கவியே சாற்றும் தொழில் உடையேன்
அன்பில் பழுத்த அரும் அமுதக் கனியே என்னை
ஆற்றுப் படுத்தி வைக்க இன்னமும் ஏன் தயக்கம்?

இன்னமும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்ப லலிதே......

அம்ப லலிதே மாம் பாலய
பரசிவ லலிதே
சௌ பாக்ய ஜனனீ லலிதே

அம்ப சீதே பரமானந்த விலாசீதே
குரு பக்த ஜனகா வ்ருதே
பர தத்வ சதாரச மிலிதே
அம்ப சாசினி துரித விலாசினி நிகம
நிவாசினி விஜய விலாசினி பகவதி லலிதே (அம்ப)

அம்ப பாலே குங்கும ரோங்கித பாலே
பரி பாலித சுரமுனி ஜாலே
பவ பாச விமோச்ன மூலே
அம்ப ஹிமகிரிதனயே கமலசு நிலையே
சுமஹித சதயே சுந்தர ஹ்ருதயே லலிதே (அம்ப)

அம்பராமே கன சுந்தர மேக சியாமே
நிலயீ ஹ்ருத ஹர தனு வாமே
சகலாகம வீதிதோத் தாமே
அம்ப வாமா சாரிணி காமவிஹாரினி
சாம வினோதினி சோமசேகரீ லலிதே (அம்ப)

அம்ப துங்கே ப்ருங்காலக பரிலச கங்கே
பரி பூரித கருணா பாங்கே
சுர சித்ருவ கர்வ விபாங்கே
அம்ப சங்கர ஹிதமுனி புங்கவ நுதபத
மங்கள சுபஹரி சர்வ மங்களே லலிதே (அம்ப)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்ப குந்தே பரிவந்தித சனக சனந்தே
வந்தாருண மஹி சுரு ப்ருந்தே
ம்ருக ராஜஸ்கந்தே ஸ்பந்தே
அம்ப இந்திர மந்திர பிந்து சமாகுல
சுந்தர சரணே த்ரிபுர சுந்தரீ லலிதே

(அம்ப)

## நவரஸ நாயகி

ராகம்: கல்யாண வசந்தம்

பல்லவி

**சாந்தம்** முகம் தவழும் **கருணை** விழி தவழும்
ஏந்தும் கரந்த வரின் **சோகம்** விழுந்தொழியும் (சாந்தம்)

அனுபல்லவி

சார்ந்து தொழும் அடியார் வாழ்வில் **இன்பம்** தவழும்
ஆர்க்கும் துயர்ப் **பயங்கள்** அற்று விழும் தினமும் (சாந்தம்)

சரணம்

**கோபம்** கொண்டே அரக்கர் கொடுமைகள் கொன்றொழித்த
**வீரம்** மிகுந்த அந்தத் தேவி மஹாத்மியத்தை
நேரமெல் லாம் உரைத்தால் நேர்ந்திடும் **அற்புதங்கள்**
நவிலத் திறமை ஏது **நகை** முகம் பார்த்திருப்போம். (சாந்தம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரபிமானம்.......

இராகம் - ராகமாலிகை தாளம்-ஆதி

**பல்லவி**

ஆரபி மானம்வைத் தாதரிப் பாரென்னை
ஆனந்த பைரவி (ஆரபி )

**அனுபல்லவி**

பரில் உனையல்லால் பரம கல்யாணி
யாரிடத் தினில் சொல்வேன் அம்சத்வனி சிவகாம சுந்தரி
(ஆரபி)

**சரணம்**

சந்ததமும் நான் சாரங்க பாணி தேவி நின்
சரணமே கதியென்று சாமஜ காமினி
சிந்தனை செய்ய ஜெகன் மோகன ரூபினி
சித்தம் இரங்கினாலென்ன ஸ்ரீ லலிதாம்பா (ஆரபி)

தாபங்கள் தீருமே உன் தர்பார் மகிமை சொல்ல
தரமாயென்னா லென்னம்மை பரமபாவனி பைரவி
காப்பாற்ற வேணும் நீ எனை கருணாபூரி கல்யாணி
கடைகண்ணால் பாரம்மா கமலா மனோகரி (ஆரபி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பக வல்லி.......**

இராகம் - ராகமாலிகை தாளம்-ஆதி

**பல்லவி**

(ஆனந்தபைரவி)

கற்பக வல்லி நின் பெற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாயம்மா (கற்பக)

**அனுபல்லவி**

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்கார கோயில் கொண்ட
-கற்பக

**சரணங்கள்**

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌனமம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா

கல்யாணி

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினே னம்மா

பாகேஸ்வரி

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீச்வரி மாயே வாராயிது தருணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகேஸ்ரீ தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா

ரஞ்சனி

அஞ்சன மையிடும் அம்பிகையே எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம்
தஞ்சம்என அடைந்தேன் தாயே உன் சேய்நான்
ரஞ்ஜனியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா

---

**நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா.......**

இராகம்- நவரஸகன்னட தாளம்-ஆதி

**பல்லவி**

நான் ஒரு விளையாட்டு பொம்மையா – ஜெகன்
நாயகியே உமையே உந்தனுக்கு

**அனுபல்லவி**

நாநிலத்தில் பல பிறவியெடுத்து
திண்டாடியது போதாதா – தேவி

**சரணம்**

அருளமுதைப் பருக அம்மா அம்மா என்று
அலறுவதைக் கேட்பதானந்தம்மா- நான்
ஒரு புகலின்றி உன் திருவடி அடைந்தேன்
திருவுளம் இரங்காதா – தேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வண்ண வண்ணச் சேலை கட்டும்........**

இராகம்- திலங் தாளம் ஆதி

### பல்லவி

வண்ண வண்ணச் சேலை கட்டும் மீனாட்சி- எந்தன்
எண்ணமெல்லாம் உன்பதமே காமாட்சி- தேவி

### அனுபல்லவி

பண் அமுதப் பூங்குடியில் உனதாட்சி — தேவி
கண்ணணின் சகோதரி விசாலாட்சி

### சரணம்

சோமசுந்தரர் மகிழும் காம சுந்தரி நீயே
தாமரை மலர்ப் பாதம் தந்தருள்வாய் தாயே
பாமலர் பாடிடவே பணிந்தருள் தருவாயே
பூமகளும் நாமகளும் போற்றிடும் சக்தி தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனனி ஜனனி ஜனனி.......**

இராகம் ரேவதி

ஜனனி ஜனனி ஜனனி
ஜகத்தாரணி பூரணி நாரணியே

கானவினோதினி காமாட்சி
கமலத்திருப்பதமே பணிந்தேன் அனுதினமே
வரமருள்வாய்

பாடிப் பாடி உந்தன் பாதம் பணிந்துவந்தேன் பார்வதியே
பரமேஸ்வரியே
கோடி கோடி துன்பம் ஓடி மறையுமே உன்னருள்
பார்லையிலே
கடைக்கண் பாராயே கருணை பொழிவாயே காத்தவீர்யப்
பிரிய நாயகியே
அடைக்கலம் அடைந்தேன் காத்தருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருணை தெய்வமே.....**

இராகம் சிந்துபைரவி

பல்லவி
கருணை தெய்வமே கற்பகமே
காணவேண்டுமுந்தன் பொற்பதமே

உறுதுணையாக எம் எள்ளத்தில் அமர்ந்தாய்
உனையன்றி வேறு யாரோ எம் தாய்

ஆனந்த வாழ்வு அளித்திடல் வேண்டும்
அன்னையே என்மேல் இரங்கிடல் வேண்டும்
நாளும் உன்னை தொழுதிடல் வேண்டும்
நலமுடன் வாழ அருளல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா ஜனனி......

### பல்லவி

அம்மா ஜனனி சரணாலயம் நீ
ஆன்மாவின் சங்கீதம் நீ அருள் நீ

### அனுபல்லவி

தினம் தினம் தாயே தா தரிசனங்கள்
உனைவிடத் துணையாமே பிற ஜனங்கள்
ஜகத்குரு பாராட்டும் சௌந்தர்ய லகரீ
சேமம் உன் நாமமே சிவசங்கரி

### சரணம்

இருட்டினில் நீதானே திருவிளக்கு
இயல் இசை ஞானங்கள் நீ விளக்கு
தேய்பிறை காணாத வளர் பிறை நீயே
தேவரும் மூவரும் தொழும் இறை நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் பாடல்கள்

**சரவண பவ எனும்........**

ராகம்: சண்முகப்ரியா தாளம்: ஆதி

### பல்லவி

சரவணபவ எனும் திருமந்திரம் தனை
சதா ஜபி என் நாவே - ஓம்
(சரவணபவ எனும்.......)

### அனுபல்லவி

புரம் எரித்த பரமன் நெற்றிக்கண்ணில் உதித்த
போதஸ்வரூபன் பொற்பாதம் தனைப் பணிந்து
(சரவணபவ எனும்.......)

### சரணம்

மண்மிசை கிடந்துழல் பிறவிப் பிணியைத் தீர்க்கும்
மாயை அகல பேர் இன்ப நெறியைச் சேர்க்கும்
தண்மதி நிலாக் குளிர் கருணை நிலவுமிழும்
ஷண்முக ப்ரிய ஷடாக்ஷர பாவன
(சரவணபவ எனும்.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலியுக வரதன்.......

ராகம்: ப்ருந்தாவன சாரங்கா தாளம்: ஆதி

### பல்லவி

கலியுக வரதன் கண்கண்ட தெய்வமாய்
காட்சி யளிப்பது பழனியிலே
(கலியுக வரதன்.......)

### அனுபல்லவி

மலைமகள் அருளிய சக்திவேல் முருகன்
மரகத வண்ணனாம் திருமால் மருகன்
(கலியுக வரதன்.......)

### சரணம்

கண்முதற் கடவுளின் கண்மணியாய் வந்தார்
கார்த்திகைப் பெண்களின் அன்பினில் வளர்ந்தார்
விண்ணவர் குறை எல்லாம் நொடியினில் களைந்தார்
வேண்டுவார் வேண்டுமுன் வரம் எல்லாம் தந்தார்
(கலியுக வரதன்.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிக் குளநகர்.......

## காவடிச் சிந்து

சென்னிக் குளநகர் வாசன் தமிழ்
தேரும் அண்ணாமலை தாசன் - செக்கும்
ஜெக மெச்சிய மதுரக்கவி அதனைப்புஜ வரையில்புனை
வீரன் - அயில் - வேலன்

வண்ண மயில் முரு கேசன் - குற
வள்ளிதம் பணி நேசன் - குறை
வரமேதரு கழுகாசல பதிகோவிலில் வலம்நான்வர
வாதெ — சொல்வன் - மாதே

சந்நிதியில் த்வஜஸ்தம்பம் - விண்ணில்
தாவி வருகின்ற கும்பம் - என்றும்
சலராசியை வடிவார்பல கொடிசூரிய முடிமீதினில்
தாங்கும் - உயர்ந் - தோங்கும்

அருணகிரி நாளில் பழக்கம் தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம் - பல
அடியார்கண் மொழி போதினில் அமராவதி இமையோர் செவி
அழைக்கும் - அண்டம் - புதைக்கும்

கருணை முருகனைப் போற்றி — கந்த
காவடி தோளின்மேல் ஏற்றி — கொடும்
அனலேறிய மெழுகாய்வரு பவரே வரும் இகமேகதி
காண்பார் - இன்பம் - பூண்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னகவி பாடினாலும்........

**இராகம் - மனோலயம்**

**பல்லவி**

என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இரங்கவில்லை
இன்னும் என்ன சோதனையோ – முருகா (என்ன)

**அனுபல்லவி**

அன்னையும் அறியவில்லை
தந்தையும் நினைக்கவில்லை
மாமனும் பார்க்கவில்லை
மாமியும் கேட்பதில்லை (என்ன)

**சரணம்**

அட்சர லட்சம் தந்த அண்ணல் போஜராஜன் இல்லை
படசமுடன் அணைத்து பரிசளிப்பார் யாருமில்லை
இக்கணம் நீ நினைத்தால் எனக்கோர் குறையுமில்லை
அலட்சியமோ உனக்கு உன்னை நான் விடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா முருகா முருகா.......

இராகம் - நாட்டைக்குறிஞ்சி தாளம் - ஆதி

பல்லவி

முருகா! முருகா! முருகா! முருகா!

சரணங்கள்

வருவாய் மயில்மீ தினலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் - முருகா

அடியார் பலரிங் குளரே!
அவரை வருவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே - முருகா

சுருதிப் பொருளே வருக!
துணிவே கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் - முருகா

அமரா வதிவாழ் வுரவே
அருள்வாய்! சரணம்! சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமறும் கூர்வே லவனே சரணம்! - முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாகிய கோயிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய்! - முருகா

குருவே பரமன் மகனே!
குகையில் வளருங் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமரா திபனே! சரணம்! சரணம்! - முருகா

**மால் மருகனை.......**

### பல்லவி

மால் மருகனை நினைத்திரு மனமே
தினமே கணமே உதவிய (மால்)

### அனுபல்லவி

மாலகல டியார்கள் எக்காலத்திலும் துதிக்கும்
நீல மயிலில்வரும் சீலன் செந்திலில் வளர் (மால்)

### சரணம்

வாளைப் பழிக்கும் விழியா ளைமதிவ தனத்
தாளை அமரர்க்கு வாழ்வைத் தந்து மகிழ்
வேளைச்சிறு முயலும் வேளை அரக்கன் தலை
மூளை சரிய அண்டர் தாளைப பணிந்த திரு (மால்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயில்வாகனா.......

**இராகம் - மோஹனம்** **தாளம் - ஆதி**

### பல்லவி

மயில் வாகனா வள்ளி மனமோஹனா மா
சரவண பவ வரமருள்வாய் (மயில்)

### அனுபல்லவி

கயிலாயம் முதல் மலை களிலெல்லாம் களித்து
விளையாடும் பன்னிரு கையா முருகையா (மயில்)

### சரணம்

பூர்ண சந்திரன் போலும் ஆறுமுகா
புவனமெங்கும் நிறைமாயவன் மருகா
ஆரணப் பொருளே அடிமை எனையாள
வா வா வா ரா மதாஸன் பணிகுஹா (மயில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன்னையல்லால்......**

**இராகம் - சிம்ஹேந்திரமத்திமம் தாளம் - ஆதி**

**பல்லவி**

உன்னையல்லால் வேறேகதி
எனக்குண்டோ சொல்வாய் நீயே
அருள்வாய் பரம கிருபாநிதி (உன்னை)

**அனுபல்லவி**

கனை கடல் சூழ் உலகம் தனிலே
கந்தா இகபர சுகம் தந்ததென்ன ஆளவே (உன்னை)

**சரணம்**

அம்மே எனக்கருள்செய் அப்பா எனவே
சொல்லி யுமே குஞ்சரதாச னுமே சரணடைநதேன்
கைமேல் பலன் அருள் தெய்வமே
துணைசெய்தருள் ப்ரம்மேந்திரர்க் கரிய சிம்ஹேந்ரமத்யம
(உன்னை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டநாள் முதலாய்......**

இராகம்- மதுவந்தி

கண்ட நாள் முதலாய் காதல் பெருகுதடி
கையினில் வேல் பிடித்த கருணை சிவபாலனை
(கண்ட நாள்)

வண்டிசை பாடும் எழில் வசந்த பூங்காவில்
வந்து சுகம் தந்த கந்தனை என் காந்தனை
(கண்ட நாள்)

நீலமயில் தன்னை நெஞ்சம் மறக்கவில்லை
நேசமுடன் கலந்த பாசமும் மறக்கவில்லை
கோலக் கமரன் மனக் கோயிலில் உறைந்துவிட்டார்
குறுநகை தனைக் காட்டி நறுமலர் கூட்டி விட்டார்
(கண்ட நாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலியுக வரதன்.....**

இராகம்- பிருந்தாவனசாரங்கா

கலியுக வரதன் கண் கண்ட தெய்வமாய்
காட்சியளிப்பது பழனியிலே

மலைமகள் அருளிய சக்தி வேல் முருகன்
மரகதவண்ணனாம் திருமால் மருகன்

கண்ணுதற் கடவுளின் கண்மணியாய் வந்தாய்
கார்த்திகைப் பெண்களின் அணைப்பில் வளர்ந்தாய்
விண்ணவர் குறையெல்லாம் நொடியினில் களைந்தாய்
வேண்டுவோர் வேண்டு முன் வரமெலாம் தந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட இது நேரமா.....**

இராகம் சண்முகப்பிரியா

விளையாட இதுநேரமா முருகா
விளையாட இதுநேரமா
என் வினையாலே படும்பாடு தனைச் சொல்ல வரும்போது

களைத்தேன் ஜன்மமெடுத்து சளைத்தேன் பொறுத்திருந்து
உளமார உனைநாடி உனைப்பாட வரும்போது

புரியாத புதிரோ நீ அறியாத கதையோ
பரிகாசமோ என்மேல் பரிதாபமில்லையோ
விரித்தோகை மயில்மீது வருவாய் என்றெதிர் பார்த்து
வழி மீது விழி வைத்து வழி பார்த்து வரும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிங்கார வேலவன் வந்தான்....**

இராகம் ஆனந்த பைரவி

சிங்கார வேலவன் வந்தான் எந்தனையாள
சிங்கார வேலவன் வந்தான்
சிங்கார வேலவன் வந்தான்

போங்காதரவொடும் அடங்கா மகிழ்வொடும்
பெருங்காதலொடும் ஐயன்
தங்க மயிலினிடை துங்க வடிவினொடு
சிங்கார வேலவன் வந்தான்

ஸ்கந்தன் பணியுமென்பர் சொந்தன் கருணைகொள்
முகுந்தன் மருகன் முருகன் முந்தை வினை பயந்த
பந்தம் தொலைத்தருளை இந்தா இந்தா என்று
ஏழை குடி முழுதும் வாழ அருள் புரிய
சிங்கார வேலவன் வந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூவி அழைத்தால்.....**

இராகம் வலஜி

கூவி அழைத்தால் குரல் கொடுப்பான் பரம்
குன்ற மேறி நின்று குமரா என்று

பூவிதழ் மலர்ந்து புன்னகை புரிவான்
புண்ணியம் செய்தோர்க்கு கண்ணெதிரில் தெரிவான்

தேவியர் இருவர் மேவிய குகனே
திவ்யங்களை அணிந்த சங்கரன் மகனே
பாவலர் யாவரும் பாடிடும் வேந்தனே
பொன்மயில் ஏறிடும் சண்முக நாதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனதிற்குகந்தது.......**

இராகம் சிந்துபைரவி

மனதிற் குகந்தது முருகன் ரூபம்
மாயை நீக்குவது அவன் திருநாமம்

தினமும் காப்பது அவன் கைவேல்
தீரா வினைகளை தீர்க்கும் கதிர்வேல்

எண்ணும் எண்ணமெலாம் நிறைவேறும்
பண்ணும் பூஜையினால் பலனுண்டாகும்
மண்ணில் நாம் படும் துயர் தீரும்
மாறா இன்பமும் மனதினில் தேறும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு பாடல்கள்

### என்ன தவம் செய்தனை.......

**இராகம் - காபி** **தாளம் - ஆதி**

**பல்லவி**

என்ன தவம் செய்தனை – யசோதா
என்ன தவம் செய்தனை (என்ன)

**அனுபல்லவி**

எங்கும் நிறை பரப்பிம்பம்
அம்மா என்றழைக்க (என்ன)

**சரணம்**

ஈரேழு புவனங்கள் படைத்தவனை
கையிலேந்தி சீராட்டி பாலூட்டித்தாலாட்ட (என்ன)

பிரமனும் இந்திரனும் மனத்தில் பொறாமை கொள்ள
உரலில்கட்டி வாய்பொத்திக் கெஞ்ச வைத்தாய் தாயே
(என்ன)

சனகாதியர் தவயோகம் செய்து
வருந்திச் சாதித்ததை புனிதமாதே எளிதில்பெற
(என்ன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழலூதி.......**

இராகம் காம்போதி

குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்டபின்பும்
குறையேதும் எனக்கேதடி சகியே

குழலூதி

ஆழகான மயிலாடவும் மிக அழகான மயிலாடவும்
காற்றில் அசைந்தாடும் கொடி போலவும்
அகமகிழ்ந்துலவும் நிலவொளிதனிலே
தனைமறந்து புல்லினம் பாட
அசைந்தாடி மனம் இசைந்தோடி வரும் நலம் காண
ஒரு மனம் நாட
தகதிமி என ஒருபதம் பாட
தகிடததிமி என ஒரு நடம் ஆட
கன்று பசுவினதும் நன்று புடைசூழ
என்று மலரும் முகம் இறைவன் கனிவோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறை ஒன்றும் இல்லை.......

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை கண்ணா
குறை ஒன்றும் இல்லை கோவிந்தா

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா

வேண்டியதைத் தந்திட வேங்கடேசன் என்றிருக்க
வேண்டியது வேறில்லை மறை மூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா

திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா கண்ணா
திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா – உன்னை
மறையோதும் ஞானியர் மட்டும்தான் காண்பார்
திரையின்பின் நிற்கின்றாய் கண்ணா – உன்னை
மறையோதும் ஞானியர் மட்டும்தான் காண்பார்
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா
என்றாலும் குறை ஒன்றும் எனக்கில்லை கண்ணா

குன்றின்மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குன்றின்மேல் கல்லாகி நிற்கின்ற வரதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா

கலிநாளுக்கிரங்கி கல்லிலே இறங்கி
நிலையாகக் கோயிலில் நிற்கின்றாய் கேசவா
குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா
யாதும் மறுக்காத மலையப்பா
யாதும் மறுக்காத மலையப்பா உன் மார்பில்
ஏதும் தரநிற்கும் கருணைக் கடல் அன்னை
எங்கும் இருந்திட ஏது குறை எனக்கு
எங்கும் இருந்திட ஏது குறை எனக்கு
ஒன்றும் குறை இல்லை மறை மூர்த்தி கண்ணா
ஒன்றும் குறை இல்லை மறை மூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் குருநாதா ஐயப்பா

ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
அரனார் பாலா ஐயப்பா அம்பிகை பாலா ஐயப்பா
ஆபத்பாந்தவா ஐயப்பா அம்பிகை பராபரா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
இரு முடிப்பிரியா ஐயப்பா இரக்கம் மிகுந்தவா ஐயப்பா
ஈசன் மகனே ஐயப்பா ஈஸ்வரி மைந்தா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
உமையாள் பாலா ஐயப்பா உறுதுணை நீயே ஐயப்பா
ஊக்கம் தருபவா ஐயப்பா ஊழ்வினை அறுப்பவா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
எங்கும் நிறைந்தவா ஐயப்பா – எங்கள் நாயகா ஐயப்பா
பம்பையின் பாலா ஐயப்பா பந்தள வேந்தே ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
வன்புலி வாகனா ஐயப்பா வனத்திலிருப்பவர் ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா சாந்த சொரூபா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
சபரி கிரீசா ஐயப்பா சாஸ்வத ரூபா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா
ஓம் ஓம் ஐயப்பா ஓம் குருநாதா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே ஓடுது

எங்கே ஓடுது எங்கே ஓடுது கூட்டம் எல்லாம் எங்கே ஓடுது
அங்கே ஓடுது அங்கே ஓடுது சன்னிதானம் நோக்கி ஓடுது
எங்கே போகுது எங்கே போகுது சுவாமிமார்கள் எல்லாம்
எங்கே போகுது
ஹரிஹரசுதனின் தரிசனம் காண சபரிமலை நோக்கி ஓடுது

கன்னிமூல கணபதிக்கு வந்தனம் சொல்லி
குருநாதன் துணையோடு போகணும்
சன்னிதானம் நடைதிறந்து காரணம்
சாமிமார்கள் எல்லாம் அவரைப் பார்க்க முந்தணும்
வனமாடும் தேவரையும் நினைக்கணும் நம்ம
வாபரனின் பெயரை சொல்லி ஓடணும்

ஓடும் போது சரணகோசம் விளிக்கணும்
அந்த மந்திரமே நம்மை சொர்க்கும் சீக்கிரம்

சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா

(எங்கே ஓடுது)

கல்லோ முள்ளோ குன்றோ குழியோ
போடும் சரணகோசம் தாண்ட வைச்சது
கரியோ புலியோ உலவிடும் மலையோ
சுரிகயுதம் சரணம் தூர ஓடுது
தாவனம் எங்கும் பயணிகள் முழங்க
கன்னிசாமி பரவசமாக
மீண்டும் ஏற்றம் ஓட்டம் துள்ளளாட
சரணம் விளிக்க விளிக்க யாவும் முன்னேற
சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா

(எங்கே ஓடுது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டம் எடுத்த பாதங்கள் எல்லாம் பதினெட்டாம்
படிமேலேறுது
எல்லாம் துறந்து எல்லாம் கடந்து வந்தாரை எனக்கு துவண்டு
ஏறுது
படிகளை தொட்டோ கண்களில் ஒத்தியே
சரணம் விழுந்தபடி குண்புல் ஏறுது
இருமுடி உடனே பலபடி கடந்து கொடிமரம் சுத்தியபடி
முன்னே ஓடுது
ஓடி ஓடி தளர்ந்த கூட்டம் ஐயன் ஜோதியில் கலந்து இயங்குது
நாடி நாடி வந்திடுவோனின் அவன் இரு கண்களே
அரவணைத்து

சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா

எங்கே ஓடுது எங்கே ஓடுது கூட்டம் எல்லாம்
எங்கே ஓடுது
மலை இறங்குது பம்பாநதியை அடையுது
ஐயப்பனின் இறுவியங்குது
இறங்கும் போதிலும் சரணம் விழிக்கணும் சாமி
வீண் பேச்சு தவிர்ந்து நடக்கணும்
குருவிந் தயவினால் ஐயனின் ஆசி பெற்றதற்கு
நன்றி சொல்லணும்

சுவாமி அப்பா சரணம் அப்பா
ஐயப்பா சரணம் சுவாமி அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பைரவர் பாடல்கள்

### கால பைரவா நம

கால பைரவ நாதா நமோ நம
கால அஷ்டமி தேவா நமோ நம
கஷ்டம் நீக்கும் குருவே நமோ நம காசிநாதா

அசிதாங்க பைரவ ரூபா நமோ நம
அகந்தையளிக்கும் சீலா நமோ நம
ஆலயக் காவல் தெய்வம் நமோ நம திரிசூலா

ஆனந்த பைரவ தீபா நமோ நம
உக்ர பைரவ பாலா நமோ நம
உடுக்கை ஏந்திய வீரா நமோ நம பலதேவா

கருணா மூர்த்தி சிவனே நமோ நம
குரோத பைரவ தேவா நமோ நம
காசி நாத ஜோதி நமோ நம அருள்தராய்

மேற்கு நோக்கும் பைரவா நமோ நம
சனிதோஷம் நீக்கும் தோழா நமோ நம
தீதை அழிக்கும் சீலா நமோ நம மறவாத

ஏழை பங்காள மூர்த்தி நமோ நம
ஏழ்மை அகற்றும் எழிலே நமோ நம
செல்வம் தந்திடும் ஸ்வர்ணா நமோ நம குருநாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேத்ர பால ப்ரியா நமோ நம
சிவனின் அம்ச ஸ்வரூபா நமோ நம
சர்வ மங்கள பாலா நமோ நம குறை தீர்ப்பாய்

தனம் தந்திடும் சிறுபாலா நமோ நம
ஜயமதை அளித்திடும் சிவனே நமோ நம
ஸ்வர்ணா கர்ஷண பைரவா நமோ நம அருள்தாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஆஞ்சனேயர் நாமாவளி

ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
மாருதி ராஜா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
வாயு குமாரா ஜெய் அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
அஞ்சனை புத்திரா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
சீதா ராம ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ஸ்ரீராம தூதா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ஸ்ரீராம பக்தா ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ஸ்ரீராக வேந்திர ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
ராம ராம ஜெய அநுமான்
ஜெய அநுமான் ஜெய ஜெய அநுமான்
மகானு பாவா ஜெய அநுமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்ஜனேய மங்கள கீதம்

ஜெய வீர அனுமனுக்கு சுப மங்களம்
ஜெய ராம தூதனுக்கு ஜெய மங்களம்

ஜெய ....................

சுக்ரீவன் தோழனுக்கு சுப மங்களம்
ஸ்ரீராம பக்தனுக்கு ஜெய மங்களம்
வாயு குமாரனுக்கு சுப மங்களம்
அஞ்சனை மைந்தனுக்கு ஜெய மங்களம்

ஜெய ....................

சிரஞ்சீவி அனுமனுக்கு சுப மங்களம்
தவயோக ஞானிக்கு ஜெய மங்களம்
புண்ய குமாரனுக்கு சுப மங்களம்
புவி காக்கும் அனுமனுக்கு ஜெய மங்களம்

ஜெய ....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(பிரதம குரு யாழ்.வண்.வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம், யாழ்.சத்திரம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், நம்பிக்கை பொறுப்பாளர் - செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், போஷகர் - கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை, ஆலோசகர் - ஸ்ரீ நாகேந்திரபீடம்)**

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் (நா.பா) என்பவரும் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் (சாந்தன்) ஆகிய இருவரும் கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமாகினார்கள்.

பாலசுப்பிரமணியக் குருக்கள் காலஞ்சென்ற நாகேந்திரக் குருக்கள் அமிர்தாம்பிகை அம்மாவின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற சங்கானை நாகேஸ்வர ஐயர் சுலோஷனா அம்மாவின் மூத்த மருமகனும், கௌரீஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தஸ்வரூபக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரியின் அன்பு மகனும், சண்டிலிப்பாய் ரஞ்சிதானந்தக் குருக்கள் கல்யாணியின் அன்பு மருமகனும், தபஸ்வினியின் அன்புக் கணவரும், சிவஸ்ரீ நல்லூர் தாசக் குருக்கள் (கொக்குவில்), சிவஸ்ரீ நா.சோமஸ்கந்தக் குருக்கள் (மட்டக்களப்பு), சிவஸ்ரீ நா.பாலேந்திரக் குருக்கள் (கொழும்பு), மீனாம்பாள், காலஞ்சென்ற நாகேஸ்வரி அம்பாளின் பாசமிகு சகோதரரும், பெறாமகனும், மருமகனும், சிவஸ்ரீ வல்லவேஸ்வரக் குருக்களின் சகலனும், சீதாலட்சுமி, காலஞ்சென்ற வசந்தலட்சுமி மற்றும் மலர்ராஜினி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற ராதாகிருஷ்ண சர்மா ஆகியோரின் மைத்துனி, மைத்துனரும், பெறாமகன், மருமகனும், சிவஸ்ரீ ஸ்கந்தரூபக் குருக்கள் (காரைநகர்), சிவஸ்ரீ திருமதி சாந்தஸ்வரூபி, சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் (மலேசியா), அஜந்தரூபி, ஜெயந்தரூபி, காலஞ்சென்ற சாந்தஸ்வரூபன், பிரம்மஸ்ரீ பாலகணேசன், பாலமயூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவசாமி ஐயர் மற்றும் பவளமல்லிகா (அரியாலை), காலஞ்சென்ற ராதாகிருஷ்ண சர்மா மற்றும் மீனாம்பாள், காலஞ்சென்ற ராமநாத சர்மா மற்றும் நாகேஸ்வரி (நல்லூர்), சிவஸ்ரீ தாமோதரக் குருக்கள், வல்லவாம்பிகை (நீராவியடி), சிவஸ்ரீ ரஞ்சிதானந்தக் குருக்கள், கல்யாணி ஆகியோரின் சம்பந்தியும், சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் (அரியாலை), யசோதா, கிருஷ்ணவேணி, ஜெயபாலக் குருக்கள் (புத்தளம்), பிரம்மஸ்ரீ மாரிஸ்வர சர்மா (நீராவியடி), தபஸ்வினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அத்தானும், அண்ணியும், நாகேந்திர சர்மா, பாலேஸ்வரி, சிவசங்கரி, பிரகதீஸ்வர சர்மா, பிரதாப சர்மா, பாலகௌரி, கஜலக்ஷ்மி, சுந்தரேசமணிகண்ட சர்மா, சபரீகீர்த்தனா, சபரீகீர்த்திகா, சபரீச சர்மா, சதுஸ்டிகா ஆகியோரின் ஆசைமிகு பேரப்பிள்ளைகளும், பெறாமக்களும், மருமக்களும், சிவஸ்ரீ கீர்த்திவாசக் குருக்கள் (ஒட்டுசுட்டான்), சிவஸ்ரீ ஜெயராஜக் குருக்கள் சண்டிலிப்பாய், சிவஸ்ரீ செல்வானந்தக் குருக்கள் (பருத்தித்துறை), கஸ்தூரி திவ்யஸ்வரூபி, பிரம்மஸ்ரீ சனாதன சர்மா ஆகியோர் சாந்தஸ்வரூபனின் மைத்துனர், மைத்துனியும் ஆவார்கள்.

அன்னார்களது ஈமக்கிரியைகள் நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஆலய நிர்வாக சபையினர், சுவாமிமார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல.48, 2-ம் ஒழுங்கை , பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே : 021 222 1123

(4300)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்





## சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள்

## சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்

(பிரதம குரு யாழ்.கண்டி வீதி [illegible] விநாயகர் ஆலயம், யாழ்.சத்திரம் ஸ்ரீ [illegible] ஆலயம், [illegible] பொறுப்பாளர் - [illegible] ஸ்ரீ [illegible] ஆலயம், போஷகர் - [illegible] ஸ்ரீ [illegible] - ஸ்ரீ [illegible] - காரைநகர் [illegible] விநாயகர் ஆலயம்)

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள் (நா.பா) எனபவரும் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் (சாந்தன்) ஆகிய இருவரும் கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமாகினார்கள்.

பாலசுப்பிரமணியக்குருக்கள் காலஞ்சென்ற நாகேந்திரக்குருக்கள் அபிராமம்பிகை அம்மாவின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற [illegible] நாகேஸ்வர ஐயர் [illegible] அம்மாவின் மூத்த மருமகனும் கௌரீஸ்வரியின் அன்புக் கணவரும் சாந்தஸ்வரூபக் குருக்கள், பாலசுப்பிரமணியக்குருக்கள் கௌரீஸ்வரியின் அன்பு மகனும் [illegible] ரஞ்சிதானந்தக் குருக்கள் கல்யாணியின் அன்பு மருமகனும் தயாளினியின் அன்புக் கணவரும் சிவஸ்ரீ நல்லூர் [illegible] குருக்கள்([illegible]) சிவஸ்ரீ நா.சோமஸ்கந்தக்குருக்கள் (மட்டக்களப்பு), சிவஸ்ரீ நா.பாலேந்திரக்குருக்கள்(கொழும்பு), மீனாம்பாள் காலஞ்சென்ற நாகேஸ்வரி அம்பாளின் பாசமிகு சகோதரரும் பெறாமகனும் மருமகனும், சிவஸ்ரீ வல்லவேஸ்வரக் குருக்களின் [illegible], சீதாலட்சுமி காலஞ்சென்ற [illegible] மற்றும் மனோராஜினி, ஜெகதீஸ்வரி காலஞ்சென்ற ராதாகிருஷ்ண சர்மா ஆகியோரின் மைத்துனர், மைத்துனரும், பெறாமகன், மருமகனும் சிவஸ்ரீ [illegible]குருக்கள்(காரைநகர்), சிவஸ்ரீ திருமதி சாந்தஸ்வரூபி, சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்(மலேசியா), [illegible], ஜெயந்தரூபி காலஞ்சென்ற சாந்தஸ்வரூபன், பிரம்மஸ்ரீ பாலகணேசன், [illegible] ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவகாமி ஐயர் மற்றும் பவளமல்லிகா (அரியாலை), காலஞ்சென்ற ராதா கிருஷ்ணசர்மா மற்றும் மீனாம்பாள் காலஞ்சென்ற ராமநாதசர்மா மற்றும் நாகேஸ்வரி (நல்லூர்), சிவஸ்ரீதாமோதரக்குருக்கள் - [illegible] (நீராவியடி), சிவஸ்ரீரஞ்சிதானந்தக் குருக்கள் - கல்யாணி ஆகியோரின் சம்பந்தியும் சிவஸ்ரீ [illegible]குருக்கள் (அரியாலை), யசோதா, [illegible], ஜெயபாலக் குருக்கள் ([illegible]), பிரம்மஸ்ரீ [illegible] சர்மா(நீராவியடி), தயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் மைத்துனரும் நாகேந்திரசர்மா, [illegible], சிவசங்கரி, பிரகதீஸ்வர சர்மா, பிரதாபசர்மா, பாலகௌரி, [illegible], சந்திரசேகர [illegible] சர்மா, சபரி கீர்த்தனா, சபரீக்ரித்திகா, சபரீசசர்மா, [illegible] ஆகியோரின் ஆசைமிகு பேரனும், சிறிய பெரிய தந்தை மாமனும் சிவஸ்ரீ [illegible]குருக்கள் (ஓட்டு சுட்டான்), சிவஸ்ரீஜெயராஜக் குருக்கள்(சண்டிலிப்பாய்), சிவஸ்ரீ[illegible]ானந்தக் குருக்கள் (பருத்தித்துறை), கஸ்தூரி திவ்வியஸ்வரூபி, பிரம்மஸ்ரீ [illegible]சர்மா ஆகியோர் சாந்தஸ்வரூபனின் மைத்துனர், மைத்துனி ஆவார்கள்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் [illegible] கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், [illegible] சபையினர், [illegible] அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இல.46,2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.


தகவல்:
021 222 1123 - குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

சிவஸ்ரீ.நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்
(யாழ்.வண்.வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு)
பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்



சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் இருவரும் (23.04.2016) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அகாலமரணம் எய்தினர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.04.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆலய அறங்காவலர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல.48, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, கந்தர்மடம்.

தகவல்: குடும்பத்தினர்
T.P: 077 639 1055

(4292)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள்**
(யாழ் வண் வடகிழக்கு கொண்டடி விநாயகர் ஆலய பிரதமகுரு)

**பாலசுப்பிரமணியக்குருக்கள் சாந்தஸ்வரூபக்குருக்கள்**





கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக்குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக்குருக்கள் இருவரும் 23.04.2016 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அகாலமரணம் எய்தினார்.

அன்னாரகளின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.04.2016) செவ்வாய்க கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**இல-48 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, கந்தர்மடம்.**

**குடும்பத்தினர்.**
**077 639 1055**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டியில் பற்றிய தீயால் பூசகரும் மகனும் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.25

வேட்டியில் பற்றிக்கொண்ட தீயை அணைக்க முற்பட்ட கோயில் பூசகரும், அவரது மகனும் தீக்காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் சாவடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் யாழ். கந்தர் மடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியக்குருக்கள் (வயது - 62) மற்றும் அவரது மகனான சாந்தஸ்வரரூபக்குருக்கள் (வயது - 25) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தின் பின்னர், மண்ணெண்ணெய் தோய்ந்திருந்த வேட்டியை மகன் தீயில் எரித்த போது அவருக்குத் தீ பரவி அவர் எரிகாயங்களுக்கு உள்ளானார் அதனை அணைக்க முற்பட்ட தந்தையும் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் பிற்பகல் இருவரும் உயிரிழந்துள்ளனர். இருவரது சடலங்களும் இறப்பு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றப் பணிப்புக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

(ற-ஐ-ரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனை மிரட்ட தந்தை தீக்குளிப்பு நாடகம் தவறுதலாகப்பற்றிய தீயில் இருவரும் பலி

## – நீராவியடியில் நேற்று முன்தினம் பரிதாபம் –

மகன் வெளிமாவட்டம் செல்வதைத் தடுக்கத் தந்தை நடத்திய தீக்குளிப்பு நாடகத்தில் தவறுதலாகப் பற்றிய தீயில் சிக்கி இருவரும் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் – நீராவியடி பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பூசகரான இ.பாலசுப்பிரமணியக்குருக்கள் (வயது 65), அவரின் மகனான சாந்தசொரூப குருக்கள் (வயது 25) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது:

மகனான சாந்தசொரூப குருக்கள் கம்பளையில் உள்ள ஆலயம் ஒன்றில் பணியாற்றுவதற்காக செல்லப் போவதாக தந்தையான பாலசுப்பிரமணியக் குருக்களிடம் தெரிவித்துள்ளார்.

மகன் தன்னைவிட்டுப் பிரிந்து செல்வதை விரும்பாத தந்தை அவரைத் தடுக்க முயன்றுள்ளார். ஆனால் மகன் மறுக்கவே, தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றிய தந்தை, தனக்கு தீமூட்டப்போவதாக மிரட்டியுள்ளார். இதையடுத்து மகன் சாந்தசொரூப குருக்கள் தனது முடிவை மாற்றுவதாக வாக்குறுதி அளித்தார்.

மகனின் வாக்குறுதியால் சமாதானம் அடைந்த தந்தை மண்ணெண்ணெய் நனைந்த வேட்டியை கழற்றி மாற்றிவிட்டு குளிப்பதற்கு ஆயத்தமாகியுள்ளார். இந்தச் சமயத்தில் மண்ணெண்ணெய் நனைந்த வேட்டியை சமையலறைக்கு எடுத்து சென்ற மகன் சாந்தசொரூப குருக்கள் அதனை அடுப்பில் இருந்த நெருப்பில் பிழிந்துள்ளார்.

மண்ணெண்ணெய் நனைந்த வேட்டியில் வேகமாகப் பற்றிய தீ சாந்தசொரூப குருக்களின் உடலிலும் பரவியது. மகனின் உதவிக்குரல் கேட்டு குளிக்கச் சென்ற தந்தை பாலசுப்பிரமணியக் குருக்கள் ஓடி வந்து அவரை கட்டி அணைத்துள்ளார். அவரது உடல் ஏற்கனவே மண்ணெண்ணெயால் நனைந்திருந்தமையால் வேகமாக தீ பற்றியுள்ளது.

அயலவர்கள் இருவரையும் காப்பாற்றி உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இருவரும் மரணமாகினர்.

மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஐ–48)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசகர்களான தந்தை, மகன் தீ விபத்தினால் மரணம்



(யாழ்ப்பாணம்) கோவில் வளவை துப்புரவு செய்யும் போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தினால் படுகாயமடைந்திருந்த பூசகர்களான தந்தையும் மகனும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதில் தந்தையான பாலசுப்பிரமணியக் குருக்கள் (வயது 62) மற்றும் அவரது மகனான [illegible] குருக்கள் (வயது 25) ஆகியோரே மரணம் அடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலைவேளையில் தாம் பூசை செய்து வருகின்ற யாழ்.கந்தர்மடம் புகையிரத கடவைக்கு அண்மையில் உள்ள செம்பியன்தாழ்வு ஞானவைரவர் ஆலயத்தில் மேற்படி இருவரும் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

அவ்வேளையில் மகன் குப்பைக்கு மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு வைக்க முயற்சித்து போது அவர் மீது மண்ணெண்ணெய் சிதறுண்டு தீ பரவியுள்ளது. அதை கண்ட தந்தை தீயை கட்டுப்படுத்த முயற்சித்த வேளை தீ அவர் மீதும் பரவியதில் இருவரும் கடுமையான தீக் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் இருவருமே நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இருவரது சடலங்களும் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (செ-4,30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.04.2016

# கண்ணீர் அஞ்சலி





சிவஸ்ரீ
நாகேந்திரக்
குருக்கள்
பாலசுப்பிரமணியக்
குருக்கள்

சிவஸ்ரீ
பாலசுப்பிரமணியக்
குருக்கள்
சாந்தஸ்வரூபக்
குருக்கள்

சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்
இவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த
துயர் அடைவதுடன் இவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்


## உரிமையாளரும் ஊழியர்களும்
# வேணி களஞ்சியம்
165, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

(4308)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்,
சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்
அவர்கள் அகால மரணமடைந்த செய்தி
கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு ஆழ்ந்த
அநுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கஜமுகன் ஹாட்வெயார்**
**147, 149, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


(சி-4480)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் 04

# கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ. பாலசுப்ரமணியக் குருக்கள் | சிவஸ்ரீ. சாந்தஸ்வரூபக் குருக்கள்

சிவஸ்ரீ பாலசுப்ரமணியக் குருக்கள் அவர்கள்
இந்து மதகுருமார் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட
காலம் தொடக்கம் உறுப்பினராகவும் பொருளாளராகவும்
இருந்து அளப் பெரிய செயல்களை ஆற்றியதை எவராலும்
மறக்க முடியாது. அத்தகைய ஒருவருக்கு இந்நிலை
ஏற்பட்டதையிட்டு குருமார்கள் அனைவரும் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரத்துவம் அடைந்த
குருக்கள், புதல்வர் இருவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! (4307)

**சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்**
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி





யாழ்வண் வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதம குருக்கள் **சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்** அவரது புதல்வன் **சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்** ஆகியோரின் அகால மரண மடைந்த செய்தி கேட்டு ஆழ்ந் த துயர் அடைகின்றோம். அன்னார்களின் பிரிவால் துயருற்றிருக் கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத் தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்வண் வடகிழக்கு கொண்டலடி**
**விநாயகர் ஆலய பரிபாலனை சபையினர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வோம்



அமரர் நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள்



அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்

கடந்த 23.04.2012 சனிக்கிழமை அகாலமரணமான நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் திடீர் மறைவையைக் கேட்டு அதிர்ச்சி அடைவதுடன் அவர்களின் பிரிவினால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

K.K.V. [illegible] குடும்பம்
[illegible], களபூமி, காரைநகர்.


(கே/880)
(11,17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிப் பூக்கள்

| | | |
|---|---|---|
| ஜனனம் 1954 . 10 . 28 | மரணம் 2016 . 04 . 21 | ஜனனம் 1990 . 12 . 27 |



அமரர் நாகேந்திர
**பாலசுப்பிரமணியக் குருக்கள்**



அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள்
**சாந்தஸ்வரூபக் குருக்கள்**

கடந்த 23.04.2016 எதிர்பாராத விதமாக அகாலமரணமடைந்த எமது சம்பந்தியாகிய சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள் - பாலசுப்பிரமணியக்குருக்களும் எமது மருமகனாகிய பாலசுப்பிரமணியக்குருக்கள் சாந்தஸ்வரூபக்குருக்கள் ஆகியோரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இவர்களின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருடன் நாமும் பங்கு கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சண்டிலிப்பாய்.

தே.பிரம்மஸ்ரீ சிவஸ்ரீ ச.றஜீந்திரக்குருக்கள்
கல்யாணி அம்மா குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி







தேவஸ்தான குருபரம்பரை சுந்தரம் ஐயாவின் பேரனும் கடந்த பத்து ஆண்டுகளாக எமது ஆலய நித்திய நைமித்திய கிரியைகளை செவ்வனே நடத்தி வந்த

## சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக்குருக்கள்

அவரது மகன்

## பா. சாந்தஸ்வரூபக்குருக்கள்

அவர்கள் இருவரும் அகாலமரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்ததுயர் அடைவதுடன் அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வ துடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயப் பொறுப்புரிமையாளர் சபை, காரைநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்அஞ்சலி



அமரர் நாகேந்திர
பாலசுப்பிரமணியக் குருக்கள்



அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள்
சாந்தஸ்வரூபக் குருக்கள்

கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமடைந்த நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய அறங்காவலர் சபை,
ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோவில், பாலாவோடை, களபூமி, காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்அஞ்சலி



அமரர் நாகேந்திர
பாலசுப்பிரமணியக் குருக்கள்



அமரர் பாலசுப்பிரமணியக் குருக்கள்
சாந்தஸ்வரூபக் குருக்கள்

கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமடைந்த நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள், பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய அறங்காவலர் சபை,
ஸ்ரீ முத்துமாரி அம்மன்கோயில், பாணாவோடை, களபூமி, காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**சிவஸ்ரீ**
**பாலசுப்பிரமணியக்**
**குருக்கள்**





**சிவஸ்ரீ**
**சாந்தஸ்வரூபக்**
**குருக்கள்**

எமது குருசாமியின் தந்தையாரும் தம்பியாருமான சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள் அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஐயப்பனை பிரார்த்திக்கின்றோம்.

***சுவாமி சரணம் ஐயப்பா!***

**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்.**

**துஷி சாமி, கவி சாமி,**
**கஜன் சாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ. நாகேந்திர பாலசுப்ரமணியக்குருக்கள்
சிவஸ்ரீ. பாலசுப்ரமணிய சாந்தரூபக்குருக்கள்

## அவர்களின் சிவபதம் குறித்து
சர்வதேச இந்துமத குருபீடத்தின்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கந்தர்மடம் செம்பியன் தாழ்வு ஞானவைரவர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. நாகேந்திர பாலசுப்ரமணியக்குருக்கள் மற்றும் அவரது புதல்வர் சிவஸ்ரீ.பாலசுப்ரமணிய சாந்தரூபக் குருக்கள் ஆகியோரின் அகால மரண செய்தி கேட்டு மனவேதனை அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஸ்ரீ. நாகேந்திர பாலசுப்ரமணியக்குருக்கள் மற்றும் அவரது புதல்வர் சிவஸ்ரீ. பாலசுப்ரமணிய சாந்தரூபக்குருக்கள் ஆகியோரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சபரிமலை ஸ்ரீஜயப்ப ஸ்வாமியைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி*

ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்
சர்வதேச இந்துமத குருபீடம் – கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



நாகேந்திரபாலசுப்பிரமணிய குருக்கள்



பாலசுப்பிரமணிய குருக்கள் சாந்தசோருப குருக்கள்

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாயிருந்தீர்
ஆதரவு மொழி பேசி இன்முகங்காட்டினீர்
இன்று உங்கள் பிரிவு கேட்டு மனம் வேதனையுறுகின்றோம்
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் சிரித்த முகமும்
அன்பு வார்த்தைகளும் எம் கண்முன்னே காட்சியாகி
எதிரொலித்து எம் நெஞ்சைப் பிழிகிறது காலனவன் – உம்
உயிர் பறித்துச் சென்றானே இனி காணமுடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

***ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!***


பிரிவால் துயருறும்
**யாழ் வண்வடகிழக்கு**
**கொண்டலடி விநாயக ஆலய**
பரிபாலன சபையினரும், அடியார்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
28 * 10 * 1954



இறப்பு
23 * 04 * 2016



பிறப்பு
27 * 12 * 1990

## அமரர்கள்
## பாலசுப்பிரமணிய குருக்கள்
## சாந்தசொரூப குருக்கள்

அன்பிற்கும் பண்பிற்கும்
பாசத்திற்கும் நேசத்திற்கும்
உதாரண புரசனாய்
திகழ்ந்த உத்தமரே..!
உறவுகளாலும் நண்பர்களாலும்
உயர்வாய் மதிக்கப்பட்டவரே!!
உம் போல் வெகுசிலரே இவ்வுலகில் வந்துதிப்பர்!!!
மீண்டும் வந்திங்கு பிறந்திட வேண்டும்
உம் உறவு கிடைத்திட வேண்டும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்து இளைஞர் மன்றம்
மருதடி காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்
(யாழ்.வண்.வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு)
பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்



சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் — சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள்

கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவக் குருக்கள் சிவஸ்ரீ நா.பாலஸ்கந்தரூபக் குருக்கள் அவர்களின் தந்தையார் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் மற்றும் சகோதரன் சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள் ஆகியோரின் மரணச்செய்தி அறிந்து மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை அடியார்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- பரிபாலன சபையினர்
இணுங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் முத்துக்கள் சொரிகின்றோம்





அமரர்கள்

## நாகேந்திர பாலசுப்பிரமணிய குருக்கள்
## பாலசுப்பிரமணிய குருக்கள் சாந்தசொரூபகுருக்கள்

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ண மலர் வாசமென
எம் மனங்களிலே வீசிநின்றீர்
எம் பாசமிகு அந்தணர்களே!
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனவனைக் கவர்ந்து சென்ற
கொடுமையெண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கும், உறவினர்கட்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible] துயருறும்
உதய நாகபூஷணி அம்பாள் ஆலயம்
தர்மகர்த்தா (செ. சூரியன்)
ஆலய அடியார்கள்

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி





எமது ஆலயத்தின் முன்னாள் பிரதம குரு சிவஸ்ரீ சி. மங்களேஸ்வரக் குருக்கள்
அவர்களின் அன்பு மாமனாரும், அன்பு மைத்துனரும்

| | |
|---|---|
| அமரர் | அமரர் |
| நாகேந்திர பால சுப்பிர மணிய குருக்கள் | பால சுப்பிர மணிய குருக்கள் |
| | சாந்தசோரூப குருக்கள் |
| அவர்கள் | அவர்கள் |

நேற்றுவரை நீங்கள் வாழ்ந்த மண்ணில்
இன்று நீங்கள் இல்லையே......!
உங்கள் ஆத்ம ராகங்கள்
காற்றோடு கலந்து எங்கள் காதுகளில்
ஒலித்துக் கொண்டே இருக்கின்றன...
எங்கள் நெஞ்சில் துன்பத்தை சேர்த்தபடி .....
உங்கள் உறவுகள் படும் வேதனையைப் போக்க
ஓடி வாரீர்களோ ? விரைந்து ஓடி வாரீர்களோ?
நினைக்க முடியாத கணப்பொழுதில்
சடமாய் எங்களைச் சோகக் கடலில்
மூழ்கவைத்துவிட்டுச் சென்றதேனோ?

அன்னார்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

பிரதம குருக்கள்
ஆலய நிர்வாகம், அடியார்கள்
அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி தேவஸ்தானம்

பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Harikanan, Jaffna.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர் சிவஸ்ரீ
நா. பாலசுப்பிரமணியக்
குருக்கள்



அமரர் சிவஸ்ரீ
பா. சாந்தஸ்வரூபக்
குருக்கள்

தேவஸ்த்தான குரும்பரம்பரை சுந்தரம் ஐயாவின் பேரனும் கடந்த பத்து ஆண்டுகளாக எமது ஆலய நித்திய நைமித்திய கிரியைகளை செவ்வனே நடத்தி வந்த சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக் குருக்கள் அவரது மகன் சிவஸ்ரீ பா.சாந்தஸ்வரூபக் குருக்கள் அவர்கள் இருவரும் அகாலமரணமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரம் அடைவதுடன், அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்,
காரைநகர்.

பொறுப்புரிமையாளர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
நாகேந்திர பால சுப்பிரமணிய
குருக்கள்



அமரர்
பால சுப்பிரமணிய குருக்கள்
சாந்தசொரூப குருக்கள்

வந்தவர் எல்லாம் போவது உண்மை இது
வாழ்வியல் ! உலகில் ! இயற்கைத் தன்மை
சிந்தனை எனக்குத் தோன்றிய போதும் நெஞ்சில்
செப்பிட இயலா துயரே மோதும்
உந்தனை இழந்த உணர்வே மிஞ்சும் என்றும்
உள்ளத்தில் உமது நினைவே துஞ்சும்
வந்தனை செய்வோம் வாழும் வரையில் பதிவர்
வரலாற்றில் சிறப்பிடம் பெற்றீர் !

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*


ஆலய அறங்காவலர் சபையினர்
குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
பாலாவோடை களபூமி
காரை நகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 28 * 10 * 1954



இறப்பு 23 * 04 * 2016



பிறப்பு 27 * 12 * 1990

## அமரர்கள்
## பாலசுப்பிரமணிய குருக்கள்
## சாந்தசொரூப குருக்கள்

இன்று ஒரு சேதி !
இது என்ன துயரச் செய்தி
தரணியில் இருந்து பிரிந்த சேதி
விழிநீர் வழிந்தோட
உறவுகள் உள்ளம் குமுற
சென்றவழி தெரியாது
சேர்ந்து நாம் கலங்குகின்றோம்
உதிர்ந்திடும் கண்ணீர்
எங்கள் உள்ளத்தை உருக்கிவிட
வகுத்த நியதி இது
ஆண்டவன் அழைத்துக்
கொண்டதாக எண்ணி
சோகத்தால் துயரத்தால்
அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

காரை வாழ் கலைஞர்கள்

Photo Vision



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்

பிறப்பு
28
.
10
.
1954



இறப்பு
23
.
04
.
2016



பிறப்பு
27
.
12
.
1990

அறியாத பருவமதில் அன்போடு அறிமுகமாய்
பள்ளி நண்பர்களாய் மனம் புரிந்து நாம்பழகி
வற்றாத வாஞ்சையுடன் வாழ்ந்தோமே சாந்தா...
துள்ளித்திரிந்த காலமெல்லாம் துணையாய் நீ வரவே
தோளோடு தோழனென பாரினிலே நாம் வளர்ந்தோம்...

பாசம் வைத்து பழகினோமே பரிதவித்து நிற்பதற்கா???
கனிவான பேசினாயே காலனுனை பறிப்பதற்கா???
வார்த்தைகளால் ஓலமிட்டு வதனமெல்லாம் வாடிப்போச்சு
ஒருகூட்டுக் கிளிகளென தந்தையும் தனயனையும்
கணப்பொழுதில் பறித்த விதியும்தான் நியாயமாச்சோ...



அழுதழுது தீரவில்லை அழைந்த வேகம் புரியவில்லை
ஆழ்மனது பொலிகிறது ஆத்மசாந்திக்கு பிராத்திக்கின்றோம்
ஆறுதல் சொல்லத் தெரியவில்ல அழுது இனி பயனுமில்லை
ஆத்மா சாந்தியை வேண்டியே உங்கள்
ஆத்ம சாந்திக்காய் பிராத்திக்கின்றோம்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

கண்டியைப்பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடாகவும் கொண்ட

**சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக்குருக்கள்** **பா.சாந்தஸ்வரூபக்குருக்கள்**

தோற்றம்: 28.10.1954 தோற்றம்: 27.12.1990

மறைவு: 25.04.2016

*சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தங்களையே முழுமையாக அர்ப்பணித்து அரும்பணியாற்றி இறுதியில் எம்மையெல்லாம் கலங்கவைத்து பிரிந்து சென்ற நாகேந்திரம் பாலசுப்பிரமணியக்குருக்கள் சாந்தஸ்வரூபக்குருக்கள் ஆகியோருக்கு எமது கிராம மக்களின் இதய அஞ்சலி*

*புத்தூர் மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தை நாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்புற நடாத்தி முடித்த தங்களின் சேவையை எவ்வாறு மறப்போமையா! தங்களையும் தங்கள் பிள்ளைகளின் சிறந்த குண நலன்களையும் பண்பியல்களையும் வெளிப்படுத்தி ஆலய மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்ட தங்களின் பண்பியல்களையெல்லாம் எங்களால் மறக்கமுடியாதையா*

*தங்களின் இழப்பால் துயருற்றிருக்கும் தங்களின் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைக் கூறுவதுடன் தங்களின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்...

**மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய**
**மக்களும் பரிபாலன சபையும்**

**மணற்பகுதி,**
**புத்தூர்.**

நாச தமிழ்ப் பதிப்பகம், ஆனைக்கோட்டை சந்தி அச்சுவேலி 021 205 8206, ஆஸ்பத்திரி முன்பாக அச்சுவேலி 077 2583728



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் வணக்கம்

கைதடி இணுவில்த்தோட்ட கந்தசுவாமி ஆலய
[illegible] குருக்களான **சிவஸ்ரீ பாலஸ்கந்தருபக் குருக்களின்**
[illegible]



| வையத்துள் | வையத்துள் |
|---|---|
| 28 | 27 |
| 10 | 12 |
| 1954 | 1990 |

அமரர்
**சிவஸ்ரீ ந. பாலசுப்பிரமணியக்குருக்கள்** — அமரர் **சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக்குருக்கள்**

தெய்வத்துள் – 23.04.2016

[illegible]

*அகாலமரணமடைந்த சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் மற்றும்*
*சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக்குருக்கள் ஆகியோரின் ஆத்ம சாந்திக்காகப்*
*பிரார்த்திப்பதோடு, அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும்*
*உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கைதடி
26.04.2016

பிரிவால் துயருறும்,
நற்பணிக்குழு,
இணுவில்த்தோட்ட கந்தசுவாமி ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



அமரர் பாலசுப்பிரமணியக்குருக்கள்
மண்ணில்
28.10.1954

அன்பின் உறைவிடமே பண்பின் இருப்பிடமே
பாசத்தின் மையமே குடும்பத்தின் சிகரமென திகழ்ந்தீர்கள்
கலங்கரை விளக்கம் போல மிளிர்ந்தீர்கள்
கலங்கினோம் தலைவிதி இதுவோ என்று
எம்மையெல்லாம் போற்றி நின்றீர்கள்
வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்து நின்றீர்கள்
நேற்றுவரை எம்மோடு கூடியே
அறிவு வார்த்தைகள் பல பேசி நின்றீர்கள்
இன்று எமையெல்லாம்
சோகக் கடலில் ஆழ்த்தி விட்டு சென்றீர்



அமரர் சாந்த சொரூபக்குருக்கள்
மண்ணில்
27.12.1990

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது கண்ணீர் கலந்த ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சிவபெருமான் திருவடி நிழலில் சாந்தியடைய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி... சாந்தி சாந்தி.....

விண்ணில்
23.04.2016

பிரிவால் துயருறும்
சோமாஸ்கந்த ஷர்மா
(ராஜன் ஐயர்)
ஸ்ரீப்பிள்ளையார் கோவில்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாயிருந்த
ஆதரவு மொழி பேசி அன்புகாட்டியவர்களே
இன்று உங்கள் பிரிவு கேட்டு மனம் வேதனையுறுகின்றோம்
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் சிரித்த முகமும்
அன்பு வார்த்தைகளும் எம் கண்முன்னே காட்சியாக
எதிரொலித்து எம் நெஞ்சை பிழிகிறது காலனவன் உம்
உயிர் பறித்துச் சென்றாலும் இனி காணமுடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே அஞ்சலிக்கின்றோம்.



அமரர்

**சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள்**
**பாலசுப்பிரமணியக் குருக்கள்**

**சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்**
**சாந்தஸ்வரூபக் குருக்கள்**

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றோம்.*

*ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!*

ஆறாத் துயரில்
ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய
முகாமைத்துவ சபை, ஒட்டுசுட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



தோற்றம்
28 . 10 . 1954

மறைவு
23 . 04 . 2016

அமரர்
நாகேந்திர பாலசுப்பிரமணிய குருக்கள்



தோற்றம்
27 . 12 . 1990

மறைவு
23 . 04 . 2016

அமரர்
பாலசுப்பிரமணிய குருக்கள் சாந்தசொரூப குருக்கள்

நேசித்த நெஞ்சமெல்லாம் நிறைதுயருக்கானதுவே
இன்முறுவல் காட்டி இனிமையாய்ப் பேசும்
புன்னகைப் பூக்கள் உதிர்ந்தனவோ நெஞ்சம் கனக்குதய்யா
நேர்மையான நம் உள்ளம் கொண்டவரே கண்ணீர் நல்குதய்யா
வஞ்சித்த காலன் அவன் வாறுலைக்கழைத்தானோ?
நம்ப முடியவில்லை பண்பான உம் வார்த்தை
என்று நாம் இனிக்கேட்போம்
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல் : சண்முகராசா, நாகநாதன், ரங்கனா, மோகனதர்சன், மிதுர்சன்

Jana Digital Printing



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தாங்கவில்லை எங்களால்
செய்தி கேட்டுச் சிதறிப்போனோம்
உம் சிரித்த முகம் மட்டும்
இன்னும் எம் கண்களிலே பசுமையாய்
சிறகிழந்த பறவைகளாய்
கூடியிருந்து தனிமையானோம்
தோழர்களாய் நின்ற எம்
தோள்கள் கனக்குதையா கைபொடிந்து ஒரு
கணப்பொழுது கண்திறவும் - இது
விதியென்று விடைபெறுவோம்.



*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அமரர்
நாகேந்திர பால சுப்பிர
மணிய குருக்கள்

அமரர்
பால சுப்பிர மணிய குருக்கள்
சாந்தசோரூப குருக்கள்

பிரிவால் துயருறும்,
கஜேந்திரசாமி
(மண்டைதீவு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிக்கை

கீரிமலை ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்களின்
மருமகனும் மைத்துனரும்
உற்சவ குரு நடராஜக்குருக்கள் அவர்களின் தம்பனாரும் தம்பியாரும்

| | |
|---|---|
| அமரர் | அமரர் |
| **சிவஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணியக் குருக்கள்** | **பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தசொரூபகுருக்கள்** |



கண்ணில் நல் வண்ணம் வாழ்ந்து
மறை நான்கினையும் கற்றுணர்ந்து
கற்றபின் நிற்க அதற்கு தக என
இன்முகம் மறை மலர் எடுத்து பூசித்தீர் ஐயா
பூசித்து வரும் வேளை

குற்றமே குற்றமென்று குறைதனைத் தீக்கி—எங்கள்
பற்றுடையான் ஆலயத்தில் பறக்கவிட்டீர் கொடிதனையே
கொடிதனையே ஏற்றி கொடுமைகளைக்கு எப்போதும்
பழபத்து கொண்டவனுக்கு பத்து விழா செய்யுமென்றுரைத்தீர் ஐயா

அந்தணர் என்போர் அறவுடையோர் என்பதற்கொக்க
சந்தானகுமரன் ரூபன் ஐயாவின் தந்தையரே தம்பியரே
அந்தகன் நுனோ அரவணைத்தான் உம்மிருவரையும்
வந்தனம் செய்கின்றோம் மாருதியை உங்கள் ஆத்மா சாந்தியடைய

ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திப்பதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருப்போருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
காரை துறைவாசப்பிட்டி இலங்காபுரி ஆதிவிஜய ஆஞ்சநேய
ஆலய வழி நடத்துனர்
ஆறுமுகம் விநாயகமூர்த்தி

**26 * 04 * 2016**

சக்தி பதிப்பகம், பொன்னம்பலம் வீதி, காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர்க் காணிக்கை



செந்நீர் உறைந்துவிட
கண்ணீரில் தவிக்கவிட்டு
பாசம் தந்து உங்கள்
பூமுகம் சென்றதெங்கே?
ஆறுதலாய் ஒரு வார்த்தை
அன்போடு கேட்பதற்கு
விம்முகிறோம் கதறுகிறோம்
விழிமலர மாட்டீரோ?



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
நாகேந்திர பால சுப்பிர
மணிய குருக்கள்

அமரர்
பால சுப்பிர மணிய குருக்கள்
சாந்தசோரூப குருக்கள்

பிரிவால் துயருறும்,
தினேஸ் (பாகிஸ்தான்)
பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்ணீர் காணிக்கை

அமரர்

நாகேந்திர

பால சுப்பிரமணியக்

குருக்கள்



அமரர்

பாலசுப்பிரமணியக்

குருக்கள்

சாந்தசொரூபக்

குருக்கள்

மின்னியது செய்தி
விம்மினோம் - நெடிதுயர்
பின்னியது நெஞ்சில் - கலங்கினோம்
என்னது இது? ஏன் மறைந்தீர்?
இறைவனுக்கு உம்மை அழைக்கும் அவசரம் ஏன்?
அன்பரீர் உங்கள் ஆன்மா இறைப்பாற
விண்ணவனைப் பணிகின்றோம் நாம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சுன்னாகம் ஐயனார் கோவிலடிவாழ்
ஐயப்ப பக்தர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி...

ஆலமரம் சாய்ந்ததினால்
விழுதுகள் இன்று வாடுகின்றதோ!
மனிதன் துன்பமில்லாத இன்பம்
மட்டுமே நிறைந்த வாழ்க்கையை நாடுகிறான்
வாழ்வின் நோக்கத்திற்கு முரண்பாடாக
வாழ்வு அமையுமானால் இறைவனையே நாடுகிறான்.

இவ்வுலகின் இறைவனுடன் இரண்டறக் கலந்த எமது பெருமகனின் ஆத்மா சாந்தியடைய கிளிநொச்சி கந்தசுவாமி பெருமானை பிரார்த்திப்பதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

சம்மாந்தி
சிவஸ்ரீ ஜெக. ஜெகதீஸ்வரக்குருக்கள்
குடும்பத்தினர்

மருமகன் சிவஸ்ரீ ஜெக. ஜெயந்தக்குருக்கள்
ஸ்ரீமதி ஜெயந்தி
குடும்பத்தினர்

கந்தசுவாமி தேவஸ்தானம்
கிளிநொச்சி.



அமரர்
**சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்**
அவர்களின் புதல்வன்

அமரர்
**சிவஸ்ரீ பா. சாந்தஸ்வரூபக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம்: | மறைவு: | தோற்றம்: |
|---|---|---|
| 28 - 10 - 1954 | 23 - 04 - 2016 | 27 - 12 - 1990 |



எமது ஆலயத்தின் 14 ஆண்டுகால மஹோற்சவகால குரு

## அமரர் நா. பாலசுப்பிரமணிய குருக்கள்

அவர் தம் புதல்வர்

## அமரர் பா. சாந்தஸ்வரூப குருக்கள்

தூய உள்ளத்துடன் பாரினில் பிறந்து, உறவுகள் பலரை கவர்ந்து
உத்தமராய் பார் போற்ற வாழ்ந்து, உள்ளங்கள் துடிக்க அனைவரையும்
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள் ஐயாவே இழந்து விட்டோம் உங்களை
எம் நெஞ்சில் நீங்கா நினைவுடன் நாமெல்லாம் கண்ணீரால் நனைகின்றோம்.

*அன்னார்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்களுக்கு*
*எல்லாம் வல்ல ஆலடி முருகன் துணை நிற்பாராக.*

புதுவை அருள்மிகு
ஆலடி முருகன் தேவஸ்தானம்,
ஆவரங்கால் கிழக்கு.

பிரிவால் வருந்துகின்ற
பரிபாலன சபையினரும், உபயகாரர்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



ஆயிரம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவுகொண்டு
வேரென இருந்தீர்களே
மாயப்புயல் வடிவில்
காலனவன் உயிர் பறிக்க
சோகத்தைத் தந்துவிட்டு
சொல்லாமல் சென்றதென்ன
நல்வழிகள் காட்டி
ஒளி கொடுத்த தீபங்களே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.



சிவஸ்ரீ நாகேந்திரபால சுப்பிரமணியக் குருக்கள்

சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்

கண்ணகை அம்மன் ஆலய நிர்வாகத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் ஆருயிர்த் தலைவராய் பேரன்பின் பாத்திரமாய் சுடரொளியாய் விளங்கிய **சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்** அவர்கள் மற்றும் அவர் மகன் எமது அன்புச் செல்வம் **பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்** ஆகியோரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்றுப் பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோர்க்கும், இல்லத்திற்கு வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்கட்கும், ஈமக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டவர்கட்கும், உள் - வெளி நாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகளைத் தொலைபேசி வாயிலாகவும், கடிதமூலமாகவும் அறிவித்து எமது துயரில் பங்குகொண்ட அன்புள்ளங்கட்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்கட்கும், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்கட்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் பதாகைகளை வெளியிட்ட அனைத்து அன்புள்ளங்களிற்கும் இம்மலருக்குத் தம் நினைவலைகளை அனுப்பியவர்கட்கும், சிறந்த முறையில் இதனை வடிவமைத்துத் தந்த அச்சகத்தினருக்கும் எல்லா வகைகளிலும் நம்மோடு தோள்கொடுத்து நின்று உதவிவரும் நமது ஐயப்ப சாமிமார்களுக்கும் முன்னதாக வைத்தியசாலையில் வேண்டிய சிகிச்சைகளையும் வழங்கி சகல ஆதரவையும் நல்கிய வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆற்றொணாத் துயர மத்தியில் நாவெழா நிலையில் பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம்.

**48, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி. — குடும்பத்தினர்**
**நீராவியடி, யாழ்ப்பாணம். 021 222 1123**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org